Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

## EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

ஈன 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் பிலவ மாசி 10 ஆம் நாள் ரமழான் 15 (21-2-62) புதன்கிழமை இதழ் 11

# கிரிமினல் சட்ட மசோதா எதிர்க்கட்சிகளின் திருத்தங்கள்


## கமிட்டி நிலையிலும் நீண்ட நேர விவாதம்

கொழும்பு, செவ்வாய்
கிரிமினல் சட்ட(விசேஷ விதிகள்) மசோதா நாளை பார்லிமெண்டில் கமிட்டி நிலையில் ஷரத்துவாரியாகப் பரிசீலனை செய்யப்படவிருக்கிறது. இலங்கைப் பார்லிமெண்டின் சரித்திரத்திலேயே 31 மணி நேரம் தொடர்ந்து விவாதித்து இரண்டாம் முறையாக சென்ற வாரத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, நாளை கமிட்டி நிலையில் பரிசீலனை செய்யப்படும் பொழுதும் நீண்டநேர விவாதங்கள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. முக்கிய எதிர்க் கட்சிகள் பல மசோதாவுக்கு திருத்தங்களைக் கொண்டுவரவிருக்கின்றன.

மசோதாவை வெள்ளிக்கிழமைக்குள் மூன்றும் முறையாகவும் நிறைவேற்றி விடுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறது. மசோதா ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேறிய பின் செனட்சபைக்கு அனுப்பப்படும்.

நாளை வியாழக்கிழமை ஜனப்

(8-ம் பக்கம் பார்க்க)



'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் திரு. கே. பி. ஹரனையும் இலங்கைப் பத்திரிகை தூதுகோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்களையும் புதுடில்லியிலே தமது காரியாலயத்தில் இந்தியப் பிரதமர் நேருஜி வரவேற்கின்றார்.

# மாவனல்லையில் இளம் பெண்ணின் சடலம்

## கொலையா? யார் இந்தப் பெண்?

### பொலிசார் உதவி கோருகின்றனர்

கொழும்பு, செவ்வாய்
நைலோன் சேலை அணிந்த ஒரு இளம் பெண்ணின் சடலம் மாவனல்லையில் கிடக்கக் கண்டுபிடிக்கப் பட்டது. இந்தப் பெண்ணின் மரணம் மர்மமாக இருக்கிறது. யார் இந்தப் பெண் என்பதைக்கண்டு கொள்ள பொலிசார் செய்த முயற்சி இதுவரை வெற்றியளிக்கவில்லை. இந்தப் பெண்ணின் சடலத்தில் பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டிருப்பதான அறிகுறிகள் காணப்படுவதால் இது ஒரு கொலையாக இருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர். இந்த மர்மக்கொலை பற்றிக் கண்டுபிடிக்கவும் பொதுமக்களின் உதவியை பொலிசார் கோரியுள்ளனர்.

22 அல்லது 24 வயது மதிக்கக்கூடிய இந்த இளம் பெண்ணின் சடலம் 61-வது மைல் கல்லடியில் மாலை 5-30 மணியளவில் காணப்பட்டது. யார் இந்தப் பெண்? இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மாநிறம், நெளிநெளியான தலைமயிர், ஆரஞ்சுவர்ணத்தில் கண்ணுடிபோன்ற நைலோன் சேலையும் ஆரஞ்சுவர்ணத்தில் உள் அங்கியும் வெள்ளை 'பிரஸ்ஸியரும்' நீல நிறமும் வெள்ளையும் கலந்த பூ வேலைப்பாடமைந்த ஜாக்கெட்டும் அணிந்திருந்தார்.

## செனட் சபை மார்ச் 6-ந் திகதி கூடும்

கொழும்பு, செவ்வாய்
செனட் சபை அதன் தலைவர் செனட்டர் எஸ். விஜயசிங்கா தலைமையில் இன்று கூடியது.

கிராமசபைகள் திருத்தமசோதாவை செனட்டர் சபை முதல்வர் ஏ. பி. ஜயசூரியா இன்று இரண்டாவது தடவையாகப் பிரேரித்தார்.

சிறிதுநேர விவாதத்தின் பின் சபை மார்ச் மாதம் 6-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# சதித் திட்டம் பற்றி மேலும் பலர் விசாரணை

கொழும்பு, செவ்வாய்
தோல்வியடைந்த புரட்சிச் சதித்திட்டம் சம்பந்தமாகக் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் சென்ற வாரக் கடைசியில் மீண்டும் விசாரணை செய்யப்பட்டனர்.

சதித்திட்டம் சம்பந்தமாக ஓய்வு ஒழிவின்றி விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் சென்ற வாரக் கடைசியில் மேலும் பலரை விசாரணை செய்தனர். சதித்திட்டம் சம்பந்தமாக மேலும் தகவல்களைத் திரட்டுவதற்காக அவர்கள் விசாரணை செய்து வருகின்றனர்.

# தனியூற்று கொலை வழக்கு, எதிரிக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம், புதன்
தனியூற்று கொலை வழக்கில் வடமாகாண அசைஸ் நீதிமன்றம் நேற்று எதிரிக்கு மரண தண்டனை விதித்தது.

1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் திகதி தனியூற்றில் கந்தசாமி என்பவரைக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த செல்லப்பா செல்லத்துரை என்பவர்மீது குற்றஞ்சாட்டி கிளிநொச்சிப் பொலிசாரால் தொடரப்பட்ட இந்த வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. முன்னிலையில்

(8-ம் பக்கம் பார்க்க)

# வானவெளியில் அமெரிக்க மனிதன்

வாஷிங்டன், பெப். 20
பூமியை மும்முறை சுற்றி வருவதற்காக அமெரிக்கா விஞ்ஞானிகள் சென்ற பல வாரங்களாகத் தயார் செய்து வந்த மேஜர்கிளன் இன்று மாலை 8-48 மணியளவில் (இலங்கை நேரம்) வானவெளிக்கு அனுப்பபட்டார்.

130 தொன் எடையுள்ள 'அட்லஸ்' ராக்கட்டில் பொருத்தப்பட்ட பேழையுள் மேஜர் கிளன் பிரயாணம் செய்கிறார். மணிக்கு 13,000 மைல் வேகத்தில் மேஜர் கிளன் பூமியை வலம் வந்துகொண்டிருக்கிறார்.

கேப் கனவராலிலிருந்து வானவெளிக்குப் பிரயாணமான மேஜர் கிளன்

## "கஷ்டமில்லை; நல்ல சுகமே இருக்கிறேன்"

வானவெளியை அடைந்ததும் பூமிக்கு அனுப்பிய முதல் செய்தியில், "நான் நல்ல சுகமாக இருக்கின்றேன். எல்லாம் நல்லபடியாக இருக்கின்றன. காட்சிகள் மிக நன்றாக இருக்கின்றன. கஷ்டம் எதுவுமில்லை" என்று தெரிவித்தார். வானவெளிக்குப் பிரயாணமாவதற்கு முன் மேஜர் கிளன் பிரயாணம் செய்த பேழையுள் சுமார் இரண்டு மணிநேரம் அமர்ந்திருந்தார். மேஜர் கிளனின் வானவெளிப் பிரயாணத்தைப் பார்த்துச் செய்தி அனுப்புவதற்காக பெருந்தொகையான நிருபர்கள் கேப்கனவராலுக்கு 'படை' யெடுத்திருந்தனர். மேஜர் கிளனின் வானவெளிப் பிரயாணம் பற்றிய செய்தியை வாஷிங்டன் ரேடியோ நிலையம் அடிக்கடி ஒலிபரப்பியது. மேஜர் கிளன் வானவெளியிலிருந்து விடுத்த செய்தியையும் ரேடியோ அஞ்சல் செய்தது.

## மதுவகைகளுக்கு மாதிரி படம்

### கல்லோயா சபை கோரியுள்ளது

கொழும்பு, செவ்வாய்
கல்லோயா அபிவிருத்தி சபைக்கு கவர்ச்சிகரமான 'லேடல் ஒன்று தேவைப்படுகிறது. சேனநாயக்கா சமுத்திரத்தையும், இங்கினியாகலை மலையையும் பின்னணியாக வைத்து மாதிரிப்படம் அமைய வேண்டும். கல்லோயா அபிவிருத்தி சபையினால் உற்பத்தி செய்யப்படும் ஜின், றம் போன்ற மது பான போத்தல்களின் 'லேபல்' களுக்காகவே மாதிரிப் படம் தேவைப்படுகிறது.

இது பற்றி கல்லோயா அபிவிருத்தி சபை அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இலங்கைச் சித்திரக்காரர்களிடமிருந்து இந்த மாதிரி படம் வரையும்படி கல்லோயா சபை கேட்கும் எனவும் தேர்ந்தெடுக்கப்படும் முதல்தர லேபலுக்கு ரூ 200 சன்மானமாக வழங்கப்படும் எனவும், கூடியளவு லேபல் கவர்ச்சிகரமானதாக இருப்பதையே சபை விரும்புகிறதெனவும் கூறினர்.

லேபலில் எழுதப்படும் வாக்கியங்கள் மும்மொழிகளிலும் இருக்க வேண்டும்.

## பிரதிநிதிகள் சபை உத்தியோகஸ்தர்களுக்கு விடுமுறை

கொழும்பு, செவ்வாய்
ஜனப்பிரதிநிதிகள் சபை உத்தியோகஸ்தர்களுக்கு நேற்று விடுமுறையளிக்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை முதல் சனிக்கிழமை வரை தொடர்ந்து இவர்கள் வேலை செய்ததால் இந்த விடுமுறை அளிக்கப்பட்டது.

## விசர் நாய் தொல்லை

கல்முனை, திங்கள்
விசர்நாய்களின் தொல்லை சாய்ந்தமருதுவில் அதிகரித்துள்ளது. அண்மையில் இரு குழந்தைகள் உட்பட மூவரை விசர்நாய் கடித்திருக்கிறது.

---


### விற்பனைக்கு

1ஸ்ரீதொடர்பிலக்கமுள்ளதும் நல்ல நிலைமையில் உள்ளதுமான "ஹில்மன்" கார் விற்பனைக்கு உண்டு. 194, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

### தேவை
### வீடுவாடகைக்கு

ஐரோப்பியர்கள் வசிப்பதற்கு ஒரு சிறிய வீடு வசதிகளுடன் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கும் கச்சேரி பஸ்பாதையிலும் இருந்தால் வாடகைக்குத் தேவை. குவியல், 111-6, பீச் வீதி, யாழ்ப்பாணம்.

---

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.
வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

---

### வாடகைக்கு

கடையும், பலசரக்கு கடைக்குத் தேவையான முழுத் தளபாடச் சாமான்களும் வாடகைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். எம். வெள்ளைச்சாமி செட்டியார் 15|18, மின்சார நிலையம் வீதி, (ஆஸ்பத்திரிக்குப் பின்பக்கம்) யாழ்ப்பாணம்.


## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசி மாதம் 10ந் தேதி புதன்கிழமை இரவு 11. 18 வரையும் திருதியை, பின் சதுர்த்தி. காலை 9. 52 வரை பூரம். பின் உத்தரம். அமிர்தயோகம். இன்று சுபகருமங்களுக்கு உத்தமம். கமத்தொழிலாளருக்கு, வர்த்தகர்களுக்கு, உத்தியோகத்தருக்கு நன்மைதரும். புதியன முயற்சிப் போருக்கும் நலனுண்டு.

### இன்று பிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு பல வழிகளிலும் நற்பேறுகளை உடையதாகக் காணப்படுகின்றது. தொழில்களில் வெற்றி, பணவரவு, பெண்களால் உதவி, குடும்பச்சிறப்பு, வித்தையால் மேன்மை, ஊழியரின் உதவி ஆதியன வுள. இடைஇடை தேகநலம் பாதிக்கப்படுமாயின் உடனுக்குடன் அவை குணமடையும். பணமுடக்கம் செய்வது தீர்க்கயோசனைகளில் முடிவுசெய்யப்படவேண்டும். பெண்களுக்கு சுபகருமங்கள் நடத்தற்கும் குடும்பச் சிறப்புக்களுக்கும் இடமுண்டு. தெய்வவழிபாடு நலம்தரும்.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: நண்பரால் உதவி அவப்பொழுது கழிதல்.
பரணி: பணவரவு, கடன் தொல்லை குறைதல்.
கார்த்திகை: முயற்சித்தடை, சஞ்சலநிலை.
ரோகிணி: யாதுருவழிதொடர்பு, குடும்பநன்மை.
மிருகசீரிடம்: வாக்குநன்மை, கல்வியால் உயர்ச்சி.
திருவாதிரை: தாயாதிகளால் கஷ்டம், காரியக்கேடு.
புனர்பூசம்: தேகநலம், தொழில் உயர்ச்சி.
பூசம்: பெரியோரொ பகை, கவலை.
ஆயிலியம்: சகோதர உதவி, குடும்ப நலம்.
மகம்: உடல் நலக்குறைவு, காரியத்தடை.
பூரம்: கல்விமேன்மை, மதிப்புணச்சி.
உத்தரம்: உடன்பிறந்தோர் பகை, முயற்சித்தடை.
அத்தம்: குடும்பசௌக்கியம் சுகம்.
சித்திரை: வாக்குவன்மை, கல்விமேன்மை.
சுவாதி. ஆசையால் நட்டம், முயற்சித்தடை.
விசாகம்: வண்டிவாகன விருத்தி, பணவசதி.
அனுஷம்: கஷ்ட பிரயாணம், செலவதிகம்.
கேட்டை: புத்திசாதூயம், மதிப்புயர்ச்சி.
மூலம்: துக்கசெய்தி, கஷ்டபலன்.
பூராடம். தொழில்விருத்தி, கடன்வரவு.
உத்தராடம்: அனவசிய உழைப்பு, ஏமாற்றம்.
திருவோணம்: குடும்ப நலம், பெண்கள் உதவி.
அவிட்டம்: பெரியோர் நட்பு, தெய்வவழிபாடு.
சதயம்: ஊழியர் கஷ்டம், தொழில் நட்டம்.
பூரட்டாதி: நண்பரால்உதவி, பணக்கஷ்டம் குறைதல்.
உத்தரட்டாதி: பெண்தொல்லை, செலவு அதிகரிப்பு.
ரேவதி: தொழில் அபிவிருத்தி, நன்மைப்பேறு.

## தென்மேற்கில் வரட்சி ஏற்படலாம்

கொழும்பு, திங்கள்
நாட்டின் தென்மேற்குப் பகுதியில் வரட்சி ஏற்படுவதற்கான அறிகுறி தென்பட்டு வருவதாய் அவதான ஆராய்ச்சி இலாகா அறிவித்திருக்கிறது.

கண்டியில் சிக்கனமாகத் தண்ணீரை உபயோகிக்குமாறு முனிஸிபல்சபை மக்களை கேட்டிருக்கிறது.

# உணவு விடுதிகளில் கசிப்பு விற்பனை

### சாப்பாட்டுடன் கொடுக்கப்படுகிறதாம்

கொழும்பு, செவ்வாய்
காழும்பிலுள்ள பல சிற்றுண்டிச்சாலைகளிலும் உணவு விடுதிகளிலும் மற்றும் இடங்களிலும் கசிப்பு பிரியர்களுக்கு சாப்பாட்டுடன் 'கசிப்பு' கொடுக்கப்பட்டு வருகிறது. கோட்டை, தெஹிவளை ஆகிய இடங்களிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளிலும், சிறு சாப்பாட்டுக்கடைகளிலும் 'கசிப்பு'வியாபாரம் நடைபெற்று வருவதாக சுகாதார வைத்திய அதிகாரிகளுக்குப் பலர் முறையிட்டுள்ளனர்.

இது பற்றிச்சுகாதார இலாகா அதிகாரியொருவர் தெரிவிக்கையில், கொழும்பிலுள்ள சில உணவு விடுதிகளிலும், சிறு கடைகளிலும் 'கசிப்பு' வியாபாரம் எவ்வித கட்டுப்பாடுமின்றி நடைபெற்று வருவதாகவும், வழமையாக வரும் வாடிக்கைக்காரர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் மட்டுமே 'கசிப்பு' கொடுக்கப்படுகிறதெனவும் இதுபற்றி வந்த முறையீடுகளை சுகாதார அதிகாரிகள் சலால், பொலிஸ் பகுதியினரிடம் தெரிவித்துள்ளனர் எனவும் கூறினர்.

## நடு வழியில் பஸ் நின்றது

கிருஷ் நகர், பெப். 20
கரிம்பூர்-சாப்டிரா செல்லும் பிரயாணிகள் பஸ் ஒன்று பாதி வழியில் நின்றுவிட்டது. பஸ் நிறைய பிரயாணிகள் இருந்தனர். பஸ்ஸிலிருந்து டிரைவர் கீழே இறங்கிச் சென்று விட்டார்.

பிரயாணிகளும், கண்டக்டரும் பொறுத்திருந்து பார்த்தனர். டிரைவரைக் காணோம்! பொறுமையிழந்தவர்களாக டிரைவரைத் தேட ஆரம்பித்தனர். பக்கத்திலிருந்த வோட்டுச் சாவடியிலிருந்து டிரைவர் வெளியே வருவதைக் கண்டனர்.

பிரயாணிகளுக்கு அசௌகரியம் ஏற்பட்டதற்காக டிரைவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். வோட்டுச் சாவடி வழியில் இருந்ததால் தமது வோட்டை அளிப்பதற்காகச் செல்லவேண்டியிருந்ததென்று அவர் சமாதானம் கூறினர்.

## இஸ்ரேல் அரசாங்கம்

### சங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது

டெல்அவிவ், பெப். 19
இஸ்ரேல் எல்லைப் பிரதேசங்களில் ராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள ஒரு பிரேரணையின் விளைவாக டாக்டர் பென்குரியனின் அரசாங்கத்துக்கு எக்கச்சக்கமான நிலைமை ஏற்பட்டுள்ளதென்று கூறப்படுகிறது.

டாக்டர் பென் குரியனின் கலப்பு அரசாங்கத்திலுள்ள இடதுசாரிக் கட்சியினர் எதிர்க் கட்சிகளை ஆதரிக்கக் கூடுமென்றும் இதனால் டாக்டர் பென்குரியனின் கட்சி தனது பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும் கருதப்படுகிறது.

---

கொழும்பு, திங்கள்
அரசாங்ககடன்வங்கி டைரக்டர்கள் சபைக்கு மூன்று புதிய நியமனங்களை நிதிமந்திரி செய்துள்ளார். திரு. மஹிந்த ஏ. எல்லபொல, லே. பி, திரு கே. சண்முகலிங்கம், திரு. ஏ. எம். தாஸிம் ஆகியோரே நியமனமானவர்கள்.





ஸல்லைக் கண்டதுமே முகங்கள் மலருகின்றன

குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் கூடத்தான் ஸல்லை ஆவலோடு எதிர்நோக்குகிறார்கள். ஸல்லுக்குள்ள பாலாடையின் அரும் சுவையும் தெவிட்டாத தித்திப்புமே இதற்குக் காரணம்! அதைத் தனிப் பால் பானமாகப் பருகி மகிழுங்கள் அல்லது டீயிலோ, கோப்பியிலோ, பாலுக்குப் பதில் சேர்த்துக்கொண்டு, அவற்றின் சுவையை அதிகரிக்கச் செய்யுங்கள். ஸல் உடன் கரைந்துவிடுகிறது.
ஸல்லைப் பாவிப்பதால் பணம் மிச்சமாகும். அதன் விலை சாதாரண மோல்டட் பாலை விட அதிகமில்லை. மேலும் அது பால் மற்றும் சீனியின் செலவைக் குறைக்கும்! இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் எடுத்துச் சென்று உங்கள் குடும்பத்தாரின் முகங்கள் மலருவதைக் காணுங்கள்!

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்
குடும்பத்தார் உடன் விரும்புவது

— ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

# அல்ஜீரியாவில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது

## இருதரப்பினரிடையே ஒப்பந்தம் பூர்த்தி

பரிசு, பெப். 20

அல்ஜீரியாவில் போர் நிறுத்தம்பற்றி பிரெஞ்சு பிரதிநிதிகளுக்கும் அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணிக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாயும், இரு அரசாங்கங்களும் ஒப்பந்தத்தை அங்கீகரிக்கவேண்டியதே பாக்கி என்றும் அறிவிக்கப்பட்டது. 8 நாள் இரகசிய பேச்சுவார்த்தைக்குப் பின் சென்ற ஞாயிற்றுக் கிழமை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

இருசாராரிடையேயும் கடந்த அக்டோபர் மாதம் முதலே இரகசியத் தொடர்பு இருந்து வந்ததாயும், இரகசியப் பேச்சுவார்த்தைகள் இப்போது முடிவடைந்திருப்பதாயும் கூறப்பட்டது.

ஒப்பந்தம் அல்ஜீரியப் புரட்சி தேசியசபையிடம் சமர்ப்பிக்கப்படும். இச்சபை லிபியா தலைநகரமான டிரிப்போலியில் இன்னும் 48 மணி நேரத்தில்கூடி ஒப்பந்தம்பற்றி ஆலோசிக்கும் எனத் தெரிகிறது. பிரான்சைப் பொறுத்தவரை அல்ஜீரியா சம்பந்தமாக இதுவே இறுதித் தீர்மானம் என அறிவிக்கப்படுகிறது. இருதரப்பினரையும் கொண்ட அதிகாரபூர்வமான கூட்டம் நடைபெறுமென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

ஒப்பந்தத்தைச் சீர்குலைக்க ஐரோப்பிய இரகசிய ஸ்தாபனம் முயல்வதைத் தடுக்கும் பொருட்டு, பிரான்சிலும் அல்ஜீரியாவிலும் தீவிர ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. நாளை பிரெஞ்சு மந்திரிசபை கூடி ஒப்பந்தம்பற்றி ஆலோசிக்கும். ஐரோப்பிய ஓ. ஏ. எஸ். இயக்கத்தினர் நேற்று அல்ஜியர்ஸில் பல தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. ஏழாண்டுக்குப் பின் போர்நிறுத்தம் ஏற்படவிருக்கிறது.

### இலங்கைக்கு பாராட்டு

மாஸ்கோ, பெப். 20

சமாதானத்துக்கு உறுதி ஏற்படும் வகையில் இலங்கை பாடுபட்டு வருவதாய் மாஸ்கோவில் வெளியாகும் "இஸ்வெஸ்டியா" பத்திரிகை பாராட்டியுள்ளது. இருநாடுகளுக்குமிடையே 5 ஆண்டுகளாக ராஜீயஉறவு ஏற்பட்டிருப்பதன் ஞாபகார்த்தமாக இப்பத்திரிகை இலங்கைக்குப் பாராட்டுத் தெரிவித்தது. காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் கொள்கையே இருநாடுகளுக்குமிடையே ராஜதந்திர உறவு ஏற்படக் காரணம் எனவும் இப்பத்திரிகை கூறுகிறது.

### முத்திரை இல்லை

கொழும்பு, செவ்வாய்

நாற்பதுசத முத்திரைகளும், எண்பத்தைந்துசத முத்திரைகளும் இருப்பில் இல்லை என வருமானவரிக் கமிஷனர் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

### கிரிக்கெட்

போர்ட்ஆப்ஸ்பெயின், பெப். 20

டிரினிடாட்டிலுள்ள போர்ட்ஆப்ஸ்பெயினில் இந்தியாவுக்கும்மேற்குந்தியத் தீவுக்குமிடையேநடைபெறும் முதலாவதுகிரிக்கெட்டெஸ்ட்போட்டியில் இந்தியா, தன் 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 49 ரன்கள் எடுத்தது. முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் 289 ரன்களும், இந்தியா 203 ரன்களும் எடுத்தன.

### முன்னேஸ்வரத்தில் லக்ஷார்ச்சனை

சிலாபம், செவ்வாய்

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாதஸ்வாமி லக்ஷார்ச்சனை 26-3-62 முதல்4-4-62வரையும், ஸ்ரீ மகாவிஷ்ணு லக்ஷார்ச்சனை 5-4-62 முதல 13-4-62 வரையும் நடைபெறும் என்றும் முன்னேஸ்வரம் தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

## 15வயதுக்குமேற்பட்டவர்களே அதிகமான நோயாளர்கள்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களில், அதிகமானேர் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் என சுகாதார இலாகா கண்டுபிடித்துள்ளது. இந்த ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளின் தொகை மிகக் குறைவெனவும் இலாகா கண்டு பிடித்துள்ளது.

சுமார் 410 ஆஸ்பத்திரிகளில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 1 9 சதவிகிதமான குழந்தைகள்தான் ஆஸ்பத்திரிசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வயதுக்கும் பதினன்கு வயதுக்குமிடையிலுள்ள நோயாளரின் தொகை 9.0 சதவிகிதம் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### வாக்கு தவருத வாக்காளர்

கோவை, பெப். 20

ஆனைமலைப் பகுதியில் அபேட்சகர் ஒருவருக்குத் தாம் அளித்திருந்த வாக்குறுதியை ஒரு வாக்காளர் அப்படியே நிறைவேற்றியிருக்கிருர்.

ஒரு குறிப்பிட்ட அபேட்சகருக்குத் தமது வோட்டை அளிப்பதாக பிரஸ்தாப வாக்காளர் உறுதி கூறியிருந்தார்.

அவர் வோட்டுச் சாவடிக்குச்சென்று, வோட்டுச் சீட்டை வாங்கி, தாம் வாக்களித்திருந்த அபேட்சகரின் சின்னத்தை மட்டும் அதிலிருந்து வெட்டியெடுத்துவிட்டு வோட்டுச் சீட்டை பெட்டியில் போட்டார்.

பின்னர் அவர் தமது நண்பரை (அபேட்சகரை) தேடிக் கண்டு பிடித்து, தாம் வெட்டி எடுத்து வந்த சீட்டை அவரிடம் கொடுத்தார்!

### மந்திரியின் கார் தாக்கப்பட்டது

பாபுவா (பீஹார்), பெப். 20

மக்களைப் பயமுறுத்துவதற்காகக் காங்கிரஸை எதிர்க்கும் சில கட்சிகள் பலாத்கார முறைகளைக் கையாள்வதாக பிரதம மந்திரி நேரு கண்டித்த[illegible]

மக்கள், காங்கிரஸை ஆதரிக்காமல் தடுப்பதற்காக அவர்கள் மனதில் பயத்தை உண்டு பண்ணுவதற்கு பலாத்கார முறைகளைக் கையாள்வது முட்டாள்தனத்தின் அறிகுறியாகும் என்ருர் நேரு.

யூனியன் ரயில்வே மந்திரி ஸ்ரீ ஜகஜீவன்ராமின் கார் தாக்கப்பட்டதாக தமக்குத் தெரிய வந்ததாக திரு. நேரு கூறினர்

## சாரணர் பொன்விழாவுக்கு வாழ்த்துச்செய்தி

### மரதன் சைக்கிள் ஓட்டத்தில் சாரணர்கள் கொண்டுவந்தபேழை

மட்டக்களப்பு, செவ்வாய்

இம்மாதம் 26-ம் திகதி குதிரைப்பந்தய மைதானத்தில் நடைபெறவிருக்கும் சாரணர் பொன் விழாவுக்கு, மீன்பாடும் தேன் நாட்டிலிருந்து வாழ்த்துச் செய்தியொன்று அனுப்பப்படவிருக்கிறது. இந்த வாழ்த்துச் செய்தி அடங்கிய பேழை அம்பாறையிலிருந்து பல்வேறு பாடசாலைகளின் சாரணர்களால், மரதன் சைக்கிள் ஓட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு அம்பாறையில் இருந்து வாழ்த்துச் செய்தி அடங்கிய பேழையை எடுத்துக்கொண்டு மரதன் ஓட்டத்தைச் சாரணர்கள் ஆரம்பித்தார்கள். இம்மரதன் ஓட்டத்தில் முறையே அம்பாறை, மல்வத்தை, சம்பாந்துறை, சாய்ந்தமருது, கல்முனை, கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றின் சாரணர் கோஷ்டிகள் கலந்து கொண்டன.

வாழ்த்துச் செய்தியடங்கிய பேழையை இறுதியாக, செட்டிபாளையத்திலிருந்து கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலய சாரணர்கள் பெற்றுக் கொண்டு மட்டக்களப்புக்குக் கொண்டு வந்தனர். இச்சாரணர்களை மட்டக்களப்பு மாவட்ட பல்வேறு பாடசாலைகளின் சாரணர்களும், சாரணச் சிறுமிகளும், அரசாங்க அதிபரின் இல்லத்தில்வைத்து வரவேற்றனர். சிவானந்தா சாரணர் கோஷ்டியைச் சேர்ந்த திரு. விஷ்ணுகுமார், வாழ்த்துச்செய்தியடங்கிய பேழையை மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திஸவீரசிங்கத்திடம் ஒப்படைத்தார். இந்த வாழ்த்துச் செய்தி கொழும்பில் நடைபெறும் சாரணர் பொன் விழாவுக்கு மட்டு நகர் சாரணச் சிறுவர்கள் சார்பில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### பிகாரில் ஆலங்கட்டி மழை

பாட்ன, பெப். 20

வடபிகாரில் பல இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்ததாய் அறிவிக்கப்பட்டது.

### பாகிஸ்தானில் "தியாகிகள் தினம்"

டாக்கா, பெப். 20

மொழிக் கிளர்ச்சியின் காரணமாக 10 ஆண்டுகளுக்கு முன் கிழக்கு பாகிஸ்தானில் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாகநாளை "தியாகிகள் தினம்" அனுஷ்டிக்குமாறு டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். லாகூரிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் பாதிப்பேர் வாக்களித்துவிட்டனர்

### மகாராஷ்டிரத்தில் தேர்தல்கள் ஆரம்பம்

புதுடில்லி, பெப் 20

10 நாள் நடைபெறும் இந்தியத் தேர்தலில் இன்று 6-வது நாளாகும். தமிழ்நாட்டுத்தேர்தலில் பாதிப்பேர்வாக்களித்து முடித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

மகாராஷ்டிரத்தில் இன்று தேர்தல்கள் ஆரம்பமாகின்றன. 1960ம் ஆண்டு மேமாதம் பம்பாய் இருமொழி ராஜ்யமாகப் பிரிக்கப்பட்டபின் மகாராஷ்டிரத்தில் தேர்தல் நடப்பது இதுவேமுதன்முறையாகும்.

நேற்று 7 ராஜ்யங்களில் தேர்தல்கள் நடைபெற்றன. மேற்கு வங்காளத்திலும், தமிழ்நாட்டிலும் தேர்தல்கள் தொடர்ந்து நடைபெற்றன. நகரப்பகுதிகளிலும், கிராமங்களிலும் சுறுசுறுப்பாக வாக்குப்பதிவுகள் நடைபெற்றன. எல்லையோரப்பகுதிகளில் தேர்தலில் மக்கள் தீவிர அக்கறை காட்டினர். மணிப்பூரில் பலர் ஓட்டுப்பதிவு செய்தனர். தூரத்து மலைப்பகுதிகளில் ராணுவப்பாதுகாப்புடன் மக்கள் வாக்களித்தனர். அஸ்ஸாம்தேயிலைத்தோட்டங்களில் ஓட்டுப்பதிவில் அதிக அக்கறை காட்டப்பட்டது. ராஜஸ்தானில் வாக்காளர்களாகிய நாடோடிகள் ஒட்டகங்கள் மூலம் வந்து வாக்குப்பதிவு செய்தனர்.

இந்தியாவிலேயே ஜனத்தொகையில் அதிகமான உத்தரப்பிரதேசத்திலும், பரப்பில் அதிகமான மத்தியப்பிரதேசத்திலும் ஓட்டுப்பதிவு சுறுசுறுப்பாக நடைபெற்றது. அலகாபாத்தில் 75 சத விகிதமானேர் ஓட்டுப்பதிவுசெய்தனர். கொள்ளைக்கூட்டத்தாருக்குப் பேர் போன சாம்பல் பள்ளத்தாக்கிலும் தீவிர ஓட்டுப்பதிவு நடைபெற்றது. தமிழ்நாட்டில் நகரங்களில் 65 சதவிகிதத்திலிருந்து75சதவிகிதமானேரும்,கிராமங்களில் 50 சத விகிதத்துக்கதிகமானேரும் வாக்குப்பதிவு செய்தனர். ஒரிஸாவில் 4 பார்லிமெண்ட் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. மேற்குவங்காளத்தில் பெருந்தொகையானேர் வாக்களித்தனர்

### 226 பேர் இதுவரை மாண்டனர்!

ஹாம்பர்க், பெப். 20

வடமேற்கு ஜெர்மனியில் வெள்ளம், சூறவளி ஆகியவற்றினல் இதுவரை 226 பேர் பலியாகியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. ஆயினும் 500 பேர் வரை மாண்டிருக்கக்கூடுமென உத்தியோகப்பற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

## பசுக்களை கொல்வது நியாயமற்றது

### சமயப் பிரசங்கத்தில் அறிவுரை

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை சபையாரின் சார்பில் நடைபெற்ற சமயப் பிரசங்கத்தில் சமயப் பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அரச நீதி என்னும் பொருள்பற்றி பேசிய போது குறிப்பிட்டதாவது:-

"பண்டைக்கால மன்னனுகிய மனு நீதி கண்ட அரசன் தன் மகன் தேர்ச்சில்லினுல் பசுக்கன்றை நெரித்துக் கொன்றதற்காக தன் மகனையே தேர்ச்சில்லினுல் நெரித்துக் கொல்ல முயன்ருன். ஆறறிவுடைய மக்களுக்கும் ஐந்தறிவுடைய மிருகங்களுக்கும் ஒரே நீதியைச் செலுத்தியவன் மனுநீதி கண்ட சோழன். அரசன் பசுவிற்கு நீதி செலுத்த முற்பட்டான். அப்படிப்பட்ட பசுக்களை இன்று கொலை செய்வது நியாயமாகுமா?" அடுத்தபடியாக செல்வி. கோ. புஷ்பராணி திருநீறு என்னும் விஷயம்பற்றி பேசினர். திருநீற்றை தாம் தாமே பசுவின் சாணத்திலிருந்து ஆக்கிக்கொள்ள வேண்டும் என்றும் விபூதியை விலைக்கு வாங்கி அணிவது பாவம் என்றும் குறிப்பிட்டார். அதன் பின் ஆலய வழிபாட்டின் அவசியமும் விநாயகப் பெருமானின் திருவருளின் தன்மையையும் பற்றி சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி சொற்பொழிவாற்றினர்.

### அன்ரூ இளவரசருக்கு 2 வயது

லண்டன், பெப். 20

எலிஸபெத் ராணியினதும் எடின்பரோ கோமகனதும் இளைய புதல்வர் இளவரசர் அன்ரூ, நேற்று அவரது இரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினர்.

இந்த வைபவத்தையொட்டி பொது இடங்களிலும், அரசாங்க கட்டிடங்களிலும் கொடிகள் பறக்க விடப்பட்டன

### காங்கோவில் 90,000 பேர் வேலை நிறுத்தம்

லியப்போல்ட்வில்லி, பெப். 20

காங்கோவில் சம்பளஉயர்வு, நல்ல வேலை நிலைமை ஆகியவற்றைக் கோரி 90,000 தொழிலாளர் வேலைநிறுத்தம் ஆரம்பித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

**மணி வாக்கு!**

'நல்ல காரியங்களுக்குக் கஷ்டப்படவேண்டியிருக்கும்போது தான் அவற்றின் மதிப்பு மேலும் உயருகின்றது.'


# ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மாசி மீ 10 உ (21- 2 - 62)


## புதிய மேயர்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உதவி மேயரைப் போட்டியில்லாமற் தெரிவு செய்ததுபோலவே, புதிய மேயரும் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்படுவது பெரிதும் விரும்பத்தக்கதென இங்கு எழுதியிருந்தோம். அவ்வாலே மேயர் தெரிவில் போட்டியேற்படாமல் திரு. எம். ஜேக்கப் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டுகின்ருேம். இத்தகைய ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்திய மாநகரசபை அங்கத்தினரின் செயலை அனைவரும் போற்றுவர்.

அரசியற் கொள்கைகளைப் பொறுத்தமட்டில் கருத்து வேற்றுமைகளையோ, கட்சி வேறுபாடுகளையோ மறந்து, கோபதாபங்களைத் துறந்து, நகரத்தின் வளர்ச்சிக்காகவும் பொது மக்களின் நல்வாழ்வுக்காகவும் ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டியதன் அவசியத்தை அங்கத்தினர் உணர்ந்திருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது. பொதுசன சேவையில் அரசியல் தலையீடோ, தனிப்பட்டவர்களின் ஆதிக்கமோ குறுக்கிடாதிருந்தால் தான் ஜனநாயகம் சரியான முறையில் இயங்க முடியுமென புதிய மேயரைப் பாராட்டிப் பேசியவர் கூறிய வார்த்தைகள் அனைவரினதும் கவனத்துக்குரியன.

மேயர் பதவிக்கு வேறும் இருவரின் பெயர்கள் ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்டன. ஆனல் அவர்கள் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டனர். தாம் போட்டியிடாது அனுபவம் வாய்ந்த ஒருவரை ஆதரிக்க முடிவு செய்த செயலானது யாழ்ப்பாண மாநகர சபைக்குப் பெரிய மதிப்பை இன்று அளித்துள்ளது. மக்களின் பிரதிநிதிகள் வழிகாட்டிகளாக இருக்கவேண்டுமேயன்றிக் குருடர்கள்போல் இருக்கக் கூடாது என மாநகரசபை அங்கத்தவர் ஒருவர் தெரிவித்த கருத்து பொதுசன சேவையில் ஈடுபட்டு உழைப்பவர்கள் அனைவரும் அறிய வேண்டிய தொன்று.

நெருக்கடிகள் மிகுந்த வேளையில் புதிய மேயர் தமது பதவியை ஏற்றிருக்கின்ருர். யாழ்ப்பாணத்தின் முதலாவது கத்தோலிக்க மேயர் என்ற பெருமையும் இவருக்குக் கிடைத்துள்ளது. கத்தோலிக்க சமயத்தையும் கரையோரப்பகுதியையும் சேர்ந்த ஒருவர் மேயராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது அனைவருக்கும் திருப்தியை அளிக்கும் அத்துடன் புதிய மேயர் எத்தனையோ ஆண்டுகளாகச் சபையின் அங்கத்தவராகப் பணியாற்றி வருகின்ருர். அவருடைய பழுத்த அனுபவம் இவ்வேளையில் நாட்டுக்குக் கிடைத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆற்றல் மிக்கவர்களை ஆதரித்து நாட்டு நலனுக்காக உழைப்பதே மக்கள் பிரதிநிதிகளின் குறிக்கோளாக இருக்கவேண்டுமெனப் புதிய மேயர் தமது நன்றியுரையிற் குறிப்பிட்டிருந்தார். மேயர், கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டவராய் விளங்கித் தமது பணியைச் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெறுவார் என நம்புகின்ருேம். இவற்றுடன் கூடவே வடபகுதியிலுள்ள எம். பி.க்களின் ஒத்துழைப்பும் மேயருக்குக் கிடைக்குமாயின் நகரத்தின் வளர்ச்சிக்கான சகல துறைகளிலும் அவர் நன்கு உழைக்க ஏதுவாகும். ஏனைய மாநகரசபைகளுக்கு யாழ்ப்பாணம் ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டுமாயின் மக்கள் சேவையே அதன் குறிக்கோளாக இருக்கவேண்டும். இந்தச் சிறப்பையடைவதற்கு அனைவரும் மேயருக்குத் தமது ஆதரவை அளிப்பார்களாகில் யாழ்ப்பாணத்தின் மதிப்பு மேலும் உயரும் என்பதற்குச் சந்தேகமில்லை.

# தன்னம்பிக்கை நிறைந்தவர் நேரு
## ஐசனேவர் புகழ்மாலை

நியூயார்க், பெப். 20

**இந்தியப் பிரதமர் நேரு மிகவும் இன்றியமையாத மனிதர். அவர் அந்த வட்டாரத்தில் இருந்தேயாகவேண்டும் என்று முன்னள் அமெரிக்க அதிபர் ஐசனேவர் கூறினர்.**

**ஐசனேவர் அண்மையில் கொலம்பியா ஒலிபரப்பு கார்ப்பரேஷன் டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் பேசினர்.**

### பதவியில் நீடிக்க வற்புறுத்தல்

இரண்டாண்டுகளுக்கு முன் அரசியலை விட்டு விலகப்போவதாக பிரதமர்நேருதெரிவித்திருந்தார். அதுமுடியாது;பதவியில் இருந்துதான் ஆகவேண்டுமென்று பிரதமர் நேருவுக்கு ஆட்சேபக்கடிதம் எழுதியதாகவும் ஐசனேவர் அந்த நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

### யோகம்

இந்தியாவில் நிலவும் தற்போதைய சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது இந்திய அரசாங்கத்துக்கு நேரு தலைமைவகித்து நிர்வகிப்பது சுயேச்சை நாடுகளுக்கெல்லாம் யோகம் தான் என்ருர் ஐசனேவர்.

பிரதமர் நேரு மிகவும் சிக்கலான மனிதர். அவர் மேற்கொண்டுள்ள பணியும் கூட சிக்கலும் கஷ்டமும் நிறைந்தது தான் என்ருர் அவர்.

### சுதந்திரப் பெருமுயற்சி

தாம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது வறுமையை விரட்ட மக்கள் சுதந்திரமாக பெருமுயற்சி எடுத்துக்கொண்



டதைக்கண்டதாகவும், செஞ்சீனவில் உள்ளதைப் போல அடக்குமுறையோ, அடிமைத்தனையோ இந்தியாவில் தாண்டவமாடவில்லை என்றும் கூறினர்.

சிந்து நதித்தண்ணீர் விவகாரம், காஷ்மீர் தகராறு குறித்து பிரதமருடன் விவாதம் நடத்தியபோது பிரதமர் நேரு மிகவும் சிந்தனைத் தெளிவுடன் வெறுப்போ குரோதமோ லவலேசமும் காட்டாமல் விவாதித்தார் என்று ஐசனேவர் பிரதமர் நேருவைப் பாராட்டினர்.

### தன்னம்பிக்கை நிறைந்தவர்

மற்றவர்கள்தான் தவறு புரிகிருர்கள் என்பது பிரதமர் நேருவின் கருத்து. ஆனல் தன்னம்பிக்கை நிறைந்த ஒவ்வொரு மனிதனும் அவ்வாறு தான் கருதுவர் என்ருர் ஐசனேவர்.

வல்லரசுப்போட்டியில் நேருவின் நடுநிலைக்கொள்கையைக் குறிப்பிட்ட ஐசனேவர் நடுநிலை வகிப்பதைத்தவிர அவர் (பிரதமர் நேரு) என்னதான் செய்யமுடியும்? என்ருர்.

## கடற்படை கமிஷன் விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, செவ்வாய்

கடற்படை கமிஷன் விசாரணை நேற்று 40 நிமிடநேரங்களுக்கு நடைபெற்ற பின்னர் மார்ச் மாதம் 19-ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## ஜப்பானில் புது அரண்மனை தயார்

டோக்கியோ, பெப். 20

ஜப்பானிய சக்ரவர்த்திக்கு ஒரு புது அரண்மனையைத் தேசம் கட்டி முடித்திருக்கிறது. தமது 60-வது பிறந்த நாளன்று அவர் அதில் குடியேறுவார்.

பழைய அரண்மனை யுத்தத்தின் போது எரிந்து சாம்பலாய்விட்டது. சென்ற16ஆண்டுகளாக மரமாளிகையொன்றில் அவர் வசித்து வந்தார்.

புது அரண்மனைக்கு 17 கோடி யென் செலவாயிற்று. அதைக் கட்டி முடிக்க 2 வருஷமாயிற்று. மக்களுக்கு ஜாகை வசதி போதிய அளவு இல்லாத நிலையில் தமக்குப் புது அரண்மனை தேவையில்லை என்று மன்னர் சொல்லிக் கொண்டு வந்தார். நிலைமை திருந்தியதன் பேரில் இரண்டு வருஷங்களுக்கு முன்னர் தாம் புது அரண்மனையைக் கட்டுவதற்கு அவர் இசைவு கூறினர். "புகியேஜ் அரண்மனை" என்று அதற்குப் பெயரிட்டிருக்கிருர்கள்.

பார்லிமெண்ட்

# எதிர்க்கட்சிகளின் இருபது திருத்தப் பிரேரணைகள்
## சபைக்கூட்டம் நீண்டநேரம் நடைபெறும்?

கொழும்பு, செவ்வாய்

எதிர்வரும் வியாழக்கிழமையும், வெள்ளிக் கிழமையும் ஜனப்பிரதிநிதிகள்சபை கூடும் பொழுது சபைக்கு தவருது சமுகம் கொடுக்கும்படி எம். பி. க்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சபைக் கூட்டம் நீண்டநேரம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கியதேசியக்கட்சி, தனது அங்கத்தவர்கள் எல்லோருக்கும் அனுப்பிய கடிதத்தில், எதிர்வரும் ஜனப்பிரதிநிதிகள் சபைக்கூட்டத்துக்கு சமுகமளிக்க வேண்டுமென்றும், திருத்தமசோதா பற்றி கலந்து பேசுவதற்கு வியாழக்கிழமை காலை நடைபெறவிருக்கும் கட்சிக் கூட்டத்திற்கும் தவருது சமுகமளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது. மற்றக்கட்சிகளும் இவ்வாரத்தில் கூடி தங்கள் நிலைமைபற்றி முடிவு செய்யும்.

எதிர்க்கட்சிகள் 20 திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவரும் எனத் தெரிகிறது.

## வயிற்றுக்குள் ரூ. 5 லட்சம் வைரம்!

பம்பாய், பெப். 20

பிரிட்டனைச் சேர்ந்த ஜோசப் பிரான்காய்ஸ் என்பவருக்கு பம்பாய் பிரதமமாகாண மாஜிஸ்டிரேட் ஒன்றரை வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தார். ஹாங்காங் விஸா வைத்திருந்தஇவர், 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமான வைரக்கற்களை கடத்தல்செய்ததால் இத்தண்டனை விதிக்கப்பட்டது.

எதிரி ஜனவரி மாதம் 24-ம் திகதி, பாங்காக்கிலிருந்து, சாந்தாகுருஸ் விமானநிலையத்தில் வந்திறங்கிய சமயம், சந்தேகத்தின் பேரில் சுங்க இலாகா அதிகாரிகள் இவரைக் கைது செய்தனர். எக்ஸ்ரே படம் பிடித்து சோதனை செய்ய அழைத்துச் சென்றபொழுது, வயிற்றுக்குள் வைரங்களை வைத்திருப்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

## 'காந்திக்கு தான் என் வோட்டு'

பாட்ன, பெப். 20

பாட்ன அருகேயுள்ள பக்ஷாரி கிராமத்தில் ஓட்டுச் சாவடியில் 90 வயதுள்ள ஒரு கிழவி, தான் விரும்பிய அபேட்சகர் போட்டியிடாததால், ஓட்டுப் போடாமலேயே ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். அவர் விரும்பிய அபேட்சகர் யாருமில்லை; காந்திஜி தான்.

தடியை ஊன்றிக்கொண்டு ஓட்டுச்சாவடிக்குச் சென்று காந்திஜிக்கு தான் ஓட்டுபோடவேண்டுமென அக்கிழவி கூறினர்.

காந்திஜி காலமாகி விட்டார் என்று எவ்வளவோ அதிகாரிகள் அவருக்கு எடுத்துக் கூறியும் அக்கிழவி கேட்கவில்லை.

ஏமாற்ற மடைந்த அவர், தன்னிடம் பொய் கூறிப் பயனில்லை என்று அதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு, வேறு எந்த அபேட்சகர்களைப் பற்றியும் தனக்கு அக்கறையில்லை என்று கூறிக்கொண்டே ஓட்டுப் போடாமலேயே சென்றுவிட்டார்.

## படகு மூழ்கி நால்வர் மரணம்

ஜபல்பூர், பெப் 20

நரசிங்கப்பூர் ஜில்லாவில் காரிய்பா என்னும் கிராமத்திற்கு அருகிலுள்ள நருமதை ஆற்றில், ஒரு படகு கவிழ்ந்து 4 பெண்கள் மூழ்கி இறந்ததாகக் கூறப்படுகிறது. 10 பேர்கள் ஏறவேண்டிய அந்தப்படகில் குழந்தைகள் உட்பட 24 பேர் இருந்தார்களாம்.

## ஐயாறன் எழுதுவது

'ஈழநாடு' பத்திரிகைக்குப் பெரிய வெற்றி என்று ஓர் அன்பர் மகிழ்ச்சியுடன் பாராட்டினர். என்ன என்று கேட்டேன். சதித் திட்ட சம்பந்தமாக கவர்னர் ஜெனரலை விசாரிக்க அனுமதி வேண்டுமென்று பிரதமர் சிறிமா, மகாராணிக்குத் தந்தி அடித்துள்ளதாக ஒரு செய்தி வெளியாயிற்றல்லவா? பார்லிமெண்டிலே இரவு 1-30 மணிக்கு அச்செய்தியை மந்திரி பீலிக்ஸ் அறிவித்தார். உடனே கொழும்பிலிருந்து, யாழ்ப்பாணத்துக்கு நமது பார்லிமெண்ட் நிருபர் டெலிபோனில் அறிவித்தார். செய்தி கிடைத்ததும், அரை மணி நேரத்துக்குள் அதை பத்திரிகையில் முதல் பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில் போட்டு, அதிகாலையிலேயே யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு விட்டோம்.

கொழும்பிலேயே 'டெயிலி நியூஸ்' உள்ளிட்டு எந்த காலைப் பத்திரிகையும்கூட அச்செய்தியை வெளியிடவில்லையாம். மாலைப் பத்திரிகைகள் தான் பிரசுரித்ததாக நண்பர் கூறி 'ஈழநாடு' உடனுக்குடன் சுடச்சுட செய்தி கொடுப்பதைப் பாராட்டி வாழ்த்தினர்.

கொழும்பிலும்கூட இச்செய்தியை முதலில் வெளியிட்ட தமிழ்ப் பத்திரிகை 'ஈழநாடு' தான் என்றும் அவர் சொல்லிப் புகழ்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஓர் அன்பர், மற்றப் பத்திரிகைகளில் இச்செய்தியைப்பற்றி ஒன்றுமேயில்லாததைக் கண்டதும், இது உண்மையாக இருக்குமா? என்று சந்தேகித்தார். மறுநாள் எல்லாப் பத்திரிகைகளும் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் இதே செய்தியைப் பிரசுரித்ததைக் கண்டதும், 'சபாஷ் ஈழநாடு' என்று பாராட்டி, அதற்கு மேன்மேலும் வெற்றிகிடைக்க வேண்டுமென்று வாழ்த்தினர்.

மலை நாட்டுப் பகுதியிலே நாளுக்குநாள் 'ஈழநாடு' பத்திரிகைக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு விற்பனையும் அதிகரித்து வருகிறது. காலை 8 மணிக்கே எல்லாப் பிரதிகளும் விற்பனையாகிவிடுகிறதாயும் அதிக பிரதிகளை அனுப்பவேண்டுமென்றும் சில வர்த்தக அன்பர்கள் கேட்கின்றனர். இதையெல்லாம் கேட்க, தவழும் பிராயத்திலுள்ள 'ஈழநாடு' க்கு அதிக பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது.

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாண ரயில்வே ஸ்டேஷனில் ஒரு அன்பர் என்னைச் சந்தித்து, தாமும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டதாயும், ஆனல் யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகையை வெற்றியுடன் நடத்த முடியவே முடியாதென்றும், இதனலேயே யாரும் இதுவரை ஆரம்பிக்கத் துணியவில்லை என்றும், 'ஈழநாடு' வெற்றிகரமாக நடப்பது சந்தேகமே என்றும் கூறினர். இதைக் கேட்க மனதுக்கு ஒரு வித வேதனையாக இருந்தது. இதுபற்றி அவரை ஒன்றுமே கேட்காமலிருக்கையில், அவராக இவ்விதம் "அஸ்து" பாடினர். விளம்பரம் வந்தால் நான் பேப்பர் லாபகரமாக நடக்க முடியுமென்றும், கொழும்புப் பத்திரிகைகளுக்குத் தான் விளம்பரங்கள் கிடைக்குமென்றும் சொன்னர்.

ஆனல் அவரே, தாம் முதலில் 'ஈழநாடு' பேப்பரைத்தான் வாங்கிப் படிப்பதாயும், யாழ்ப்பாணத்துச் செய்தி மட்டுமின்றி, உலகச் செய்திகளும் கூட சுடச்சுட ஈழநாட்டில் பார்க்க முடிகிறதென்றும் அவர் சொன்னதும் மிக ஆறுதலாக இருந்தது.

ஈழநாடு தவழும் குழந்தைப் பிராயத்தில், சிறிய உருவத்தில் இருக்கலாம். மூர்த்

(8-ம் பக்கம் பார்க்க)

# நெற்காணிச் சட்டத்தின்கீழ் மேலும் சாகுபடி பகுதிகள்

## அடுத்த வருடத்திற்குள் கொண்டுவரப்படும்

கொழும்பு, செவ்வாய்

நெற்சாகுபடி செய்யும் பகுதிகள் பல, நெற்காணிச் சட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்படும். கமத்தொழில் சேவைக் கமிஷனரின் சுற்றறிக்கையின்படி, மேலும் ஒன்பது பகுதிகள் அடுத்தவருடத்துக்குள் நெற்காணிச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும் எனத்தெரிகிறது. தற்சமயம் இச்சட்டத்தின்கீழ் 13 பகுதிகள் இயங்கி வருகின்றன.

பெரும்போகத்திலிருந்து அனுராதபுரம், மாத்தளை, புத்தளம் ஆகிய பகுதிகள் நெற்காணிச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

அடுத்தவருடம் மார்ச்மாதம் முதல், நெற்காணிச்சட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருக்கோணமலை, அம்பாறை, பொலனறுவ, பதுளை, மொணருகலை, நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

### வித்தியாதரிசி கோரிக்கை

வவுனியா, செவ்வாய்

வவுனியா வித்தியாதரிசி சகல தலைமையாசிரியருக்கும் அனுப்பிவைத்த சுற்று நிருபத்தில் பாடசாலையின் விஸ்தீரணம், கட்டிட இடவசதி, ஆசிரியர்களின் தராதரம், நியமனம் என்பவற்றை உடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளார்.

### ஆசிரியமாணவிகளின் சுற்றுப்பிரயாணம்

வவுனியா, செவ்வாய்

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரியைச் சேர்ந்த 30 ஆசிரியமாணவிகளும், இரண்டு விரிவுரையாளர்களும் இலங்கையின் சரித்திர சம்பந்தமான இடங்களைப்பார்க்கும் நோக்கத்துடன் செல்லும் வழியில் வவுனியாவில் உபசரிக்கப்பட்டனர்.

### பெற்றோரின் கவனக்குறைவு குழந்தை மரணம்

தெரனியகலை, செவ்வாய்

"பெற்றோரின் கவலையீனத்தால் இவ்வித சம்பவங்கள் நிகழ்வது இப்பொழுது சகஜமாகிவிட்டது. பெற்றோர் அவர்களது குழந்தைகள் மீது அஜாக்கிரதையாக இருந்துவிடக்கூடாது"

மூன்று வயதுக் குழந்தை டபிள்யு. ஜி. தயாவதியின் மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையின் போது, திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. டபிள்யு. ஈ. ரணசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க 12 வயதுள்ள மூத்த மகள், மூன்று வயதான தயாவதியை குளிப்பாட்டுவதற்காக ஆற்றுக்குக் கொண்டு சென்றபோது, எதிர்பாராத விதமாக தயாவதி ஆற்றில் மூழ்கி மரணமானார் என விசாரணையின்போது தெரிய வந்தது.

நீரில் மூழ்கியதால் மரணமானார் என தீர்ப்பளிக்கப்பட்டது.

### வித்தியாலய கட்டிட திறப்பு விழா

ஓமந்தை, புதன்

இன்று மாலை 4-30க்கு ஓமந்தை மகா வித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா நடைபெறும். வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தலைவராக இருப்பார். வவுனியா மாவட்ட அதிபர் திரு. செனவிரத்ன, யாழ்ப்பாணம் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம், வவுனியா வித்தியாதிகாரி ஸ்ரீமதி ஆர். ஆர். நவரத்தினம் ஆகியோர் விழாவில் பங்கு பற்றிக்கொள்வார்கள்.

### சிந்தாமணி விநாயகப் பெருமான்

நவாலி, புதன்

யாழ்ப்பாணத்தில் நவாலியின் கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானுக்கு 25-2-62 ஞாயிற்றுக்கிழமை பகல் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் விசேஷ பூசையும் மாலை பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனையும் நடைபெறும்.

### இன்று

யோகிராஜ் சச்சிதானந்தர் காலை 6-30க்கு சுன்னாகம் திவ்விய ஜீவன சங்கத்தில் ஆசனப் பயிற்சி நடத்துவார். காலை 9 மணிக்கு மைலணி சைவ வித்தியாலயத்தில் யோகாசனம் பற்றிச் சொற்பொழிவு. மாலை 4-30க்கு கோப்பாய்கிறிஸதவக் கல்லூரியில் ஆசனப்பயிற்சி. மாலை 6 மணிக்கு கைதடி அம்மன்கோவிலில் சொற்பொழிவு.

# 'முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள காலிஸ்தானங்களை நிரப்புக!'

## அரசினர் முஸ்லிம் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை

மட்டக்களப்பு, செவ்வாய்

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள காலி ஸ்தானங்களைத் தாமதமின்றி நிரப்பும்படி கிழக்குமாகாண முஸ்லிம் ஆசிரியர் சங்கம், வித்தியாதிபதியை வற்புறுத்திக் கேட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பாடசாலை ஒவ்வொன்றுக்கும் தேவையான ஆங்கில, விஞ்ஞான, சிங்கள ஆசிரியர்களின் புள்ளிவிபரங்கள் அடங்கிய அட்டவணையொன்றையும் இச் சங்கம் தயாரித்து தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளது.

அரசினர் முஸ்லிம் ஆசிரியர் சங்க, கிழக்கு மாகாணக் கிளையின் நிர்வாகக் குழுவினர் அடங்கிய தூதுகோஷ்டியொன்று வித்தியாதிபதியைப் பேட்டிகண்டு முஸ்லிம் பாடசாலைகளின் தற்போதைய நிலையையிட்டு எடுத்துரைப்பர். அத் அத்தோடு, முஸ்லிம் பாடசாலைகளின் காலி ஸ்தானங்களில் ஆசிரியர்களை நியமிப்பது பற்றியும் ஆராய்வார்கள்.

# எதிரிக்கு கடலைவிற்ற மனைவியை அடித்தாராம்

## கணவனுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ராணிதியேட்டர் வாசலில் கடலை வியாபாரம்செய்யும் நாகம்மா என்ற பெண்ணை கைகளினால் அடித்ததாக, அவரது கணவன் என். கந்தையா என்பவர்மீது யாழ்ப்பாணம் பொலிசார் வழக்குத் தொடர்ந்தனர்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு வந்தது. எதிரியின் சார்பாக வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை.

கந்தையாவின் மனைவி நாகம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"ராணி தியேட்டரில் நான் கடலைவிற்கிறேன். எதிரி எனக்குக்கிட்ட உட்கார்ந்து தீப்பெட்டி தருமாறு கேட்டார். நான் தீப்பெட்டியைக் கொடுத்த சமயத்தில் வேறொரு நபர் அங்கு வந்து பீடி கேட்டார். நான் பீடி கொடுத்தேன். எதிரி என்னை அடித்தார்."

மாஜிஸ்டிரேட்:- "எதிரி உனக்கு உறவினரா?"

சாட்சி:- "ஆம் ஐயா, அவர் என் கணவர்."

மாஜிஸ்டிரேட்:- அவர் ஏன் உன்னை அடித்தார்?"

சாட்சி:- "பீடி கேட்டவரும் என் கணவரும் சண்டைபிடித்துக்கொண்டதன் காரணமாக ஒருவருக்கொருவர் பேசுவதில்லை."

மாஜிஸ்டிரேட்: "வாதி கடலை விற்பவர். எவருக்கும் அவர் விற்கவேண்டும். இல்லாவிட்டால் குறித்த நபருக்கு பீடி விற்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுவார்."

எதிரி தான் குற்றவாளி எனக் கூறியதுடன், தனது எதிரி ஒருவருக்கு தன் மனைவி பீடி விற்றதாயும் குறிப்பிட்டார்.

மாஜிஸ்டிரேட் இதுபற்றிக் குறிப்பிடுகையில், எதிரி தன் மனைவியைக் கடலை விற்க அனுமதிக்கக்கூடாது என்றும், கணவனுக்கு உழைக்காமல் வீட்டிலேயேவைத்துப் பராமரிக்க வேண்டும் என்றும் கூறி அவருக்கு ரூ. 20 அபராதம் விதித்தார்.

### ஓட்டை மாருட்டம்!

மதுரை, பெப். 20

முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் போட்டியிடும் சாத்தூர் தொகுதியில் விருதுநகரிலுள்ள வோட் சாவடியொன்றில் எழுதப்படிக்கத் தெரியாத வாக்காளர் ஒருவர் வாக்குப் பதிவு அதிகாரிக்குச் சங்கடமான நிலையை உண்டாக்கிவிட்டார். அவ் வாக்காளர் தனது வோட்டுச் சீட்டை மடித்துக்கொணர்ந்தார். வோட்டுப் பெட்டி வைத்திருக்கும் மேஜை அருகில் வந்தார். மேஜைமீது ஒரு ஓட்டை தெரிந்தது. அதற்குள் மடித்த வாக்குச்சீட்டைத் திணித்துவிட்டார். வேலை முடிந்தது என்று கிளம்பும் தருணத்தில் வாக்குப் பதிவு அதிகாரி அவரைச் சிறிதுநேரம் நிறுத்திவைத்தார். மேஜை டிராயர் சாவியைக் கொண்டுவரச்சொன்னார். டிராயரைத் திறந்ததும் வாக்காளரையே சீட்டை எடுக்கச்சொன்னார். பின் வோட்டுப்பெட்டியைக் காட்டி அதில் போடுமாறு வாக்காளரிடம் தெரிவித்தார். வாக்காளர் அதையெடுத்துப் பெட்டியில் போட்டுக் கிளம்பினார்.

### இலங்கை வானொலியில் வள்ளுவர் தினம்

கொழும்பு, புதன்

இலங்கை வானொலி, திருவள்ளுவர் திருநாளை இவ்வாண்டும் வழக்கம்போல் மாசி உத்தரதினமாகிய 21-2-62 புதன்கிழமை (இன்று) கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது. இன்றிரவு 9-15க்கு, வள்ளுவன் வகுத்த நீதி" என்ற பொருள் பற்றி இலங்கை உயர்தர மன்றத்து நீதியரசர் கௌரவ எச். டபிள்யூ. தம்பையா வானொலியில் பேசுகிறார்.

திருவள்ளுவரை நினைவுகூரும் முகமாக இந்த வாரம் முழுவதும் சிறப்பு நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி தயாரித்து ஒலிபரப்பி வருகிறது.

பேராதனை, செவ்வாய்

மனநோயாளர்களுக்கென கண்டி ஆஸ்பத்திரியில், ஒரு வார்ட் ஒதுக்கப்படுமென சுகாதார இலாகா வாக்களித்துள்ளது.

# சட்டவிரோதமாக இலங்கை வந்த பெண்கள் கைது

## கணவன்மார்களை காணவே வந்தார்களாம்

மன்னார், செவ்வாய்

ஆள்காட்டிவழி என்ற இடத்தில் நான்கு பெண்களை, சிராம விதானை கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இவர்கள் சட்டவிரோதக்காரர்கள் எனச் சந்தேகப்பட்டே கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கையில் வசிக்கும் தங்களது கணவன்மார்களைக் காணவே, இந்தப் பெண்கள் இங்குவந்திருப்பதாகத் தெரிய வருகிறது. இவர்களுடன் கூட வந்ததாகச் சொல்லப்படும் 18 வயதுள்ள ஒரு பெண் காணப்படவில்லை.

இவர்கள் வந்த படகில் கூட வந்ததாகச் சொல்லப்படும் 9 பேரை, பலகாமுனை என்ற இடத்தில் மன்னார் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

### சனசமூக நிலையக்கூட்டம்

வவுனியா, செவ்வாய்

வவுனியா, பூந்தோட்ட சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் தலைவர். எஸ். தங்கவேலுத்தேவர் தலைமையில் பூந்தோட்ட அரசினர்பாடசாலை மண்டபத்தில் கூடியது.

கூட்டத்தில் பூந்தோட்டத்தில்கொடுபடஇருக்கும், மேட்டுநிலம், வயல்க்காணி விஷயம் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இக் காணிவிஷயமாக வவுனியாப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரத்தைப் பூந்தோட்டத்துக் கழைப்பது சம்பந்தமாகவும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

### பலநோக்குகூட்டுறவு சங்கக்கூட்டம்

வவுனியா, செவ்வாய்

வவுனியாக்குடியிருப்புபலநோக்குக்கூட்டுறவுச்சங்கக்கூட்டம் தலைவர் திரு. க. இரத்தின சிங்கத்தின் தலைமையில் வவுனியா சி. சி. பாடசாலைமண்டபத்தில் கூடியது.

கூட்டத்தில் காலியாகஉள்ள மூன்று ஸ்தானங்களுக்காக திருவாளர்கள் வி. கதிரவேலு, வி. வவுனியர், நவரத்தினம் என்போர் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

சென்ற கூட்டஅறிக்கை காரியதரிசி திரு.க. சணபதிப்பிள்ளையினால் வாசிக்கப்பட்டு ஏகமனதாகச்சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### ஜீப் விபத்தில் இன்ஸ்பெக்டர் மரணம்

பண்டாரவளை, செவ்வாய்

ஓய்வு பெற்ற பண்டாரவளை பொலிஸ இன்ஸ்பெக்டர் திரு. பி. பி. ரத்நயக்கா, நேற்று இரவு மோட்டார் விபத்தில் சிக்குண்டு மரணமானார்.

பலாங்கொடையிலிருந்து அவர் ஜீப் ஒன்றைச் செலுத்திக்கொண்டு வரும் சமயத்தில் ஜீப் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. திரு. ரத்நயக்கா ஸ்தலத்திலேயே மரணமானார்.

அதே ஜீப்பில் பிரயாணம் செய்த, மாத்தறை பொலிஸ இன்ஸபெக்டர் திரு. தசநாயக்கா, அவருடைய வேலைக்காரன் இருவரும் பலத்த காயங்களுடன் ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### 'சாப்பு'ச் சட்டம் நடைமுறையிலில்லை

ஓமந்தை, திங்கள்

வவுனியா பட்டினசபைப்பகுதியில் 'சாப்பு'ச்சட்டம் சரியானபடி அமுல் நடத்தப்படாததால் சிப்பந்திகள் பெரிதும் துன்புறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஓய்வு நாட்களிலும் வேலைசெய்யும்படி முதலாளிமாரல் துன்புறுத்தப்படுவதாக சாப்புச் சிப்பந்திகள் வவுனியா பட்டினசபைத் தலைவருக்கு அறிவித்துள்ளனர்.

### நெல் சாகுபடிக்கு இன்சூரன்ஸ்

கொழும்பு, திங்கள்

நெல் சாகுபடி பகுதிகள் எல்லாவற்றையும் இன்சூரன்ஸ திட்டத்தின் கீழ் கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்துள்ளது. தற்பொழுது இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் 25,000 ஏக்கர் மட்டுமே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

### லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

1961ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ந்திகதி மானிப்பாயை சேர்ந்த கிராமவிதானை திரு. குலதுங்கம் ராஜகுலசிங்கம் என்பவர் லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்ததாக ஆனைக்கோட்டை உதவி இன்ஸ்பெக்டர் திரு. கே. கந்தையாவினால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிதரப்பில் திரு. ஆர். விசுவநாதனுடன் திரு. சாம். ஏ. சபாபதி ஆஜரானார்.

விசாரணையின்போது அரசாங்க அறிக்கை இன்னும் வரவில்லையெனத் தெரிவிக்கவே, மாஜிஸ்டிரேட், மேல் விசாரணையை மே மாதம் 15ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### சிங்களத்தில் விசேஷ கமிட்டி அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் போக்குவரத்து சபை விசேஷ கமிட்டியின் அறிக்கை சிங்களத்திலும் பிரசுரிக்கப்படும். வழமையாக, நிர்வாக அறிக்கைகள் மும்மொழிகளிலும், விசேஷ கமிட்டிக்கான அறிக்கைகள் ஆங்கிலத்தில் மட்டிலும் தான் பிரசுரிக்கப்பட்டுவந்தன. இம்முறை சிங்களத்திலும் பிரசுரிக்கப்படும்.

# மங்கையர் உலகம்



# மாதர்குல மாணிக்கம்

## காவியக் கண்ணகி

நீண்ட பலவாண்டுகளாகப் பொலிவுற்று விளங்கி ஆடி நன் நிழலில் நீடிருங்குன்றத்தைக் காட்டுவார் போன்று கருத்து வெளிப்படுத்து நிலவும் சீரிய நூலாம் சிலப்பதிகாரத்துள்ளே பழந் தமிழர் பண்பு சான்ற வாழ்க்கை திறம்பட வரைந்து காட்டப்பட்டுள்ளது.

காப்பியத் தலைவி கண்ணகி பண்டைத் தமிழ் மகளிர் பண்பு நிறை வாழ்க்கையை நிலைநின்று நினைவுறத்த நம்மவர்க்கு சேர முனியால் வழங்கப்பட்ட பெருங் கொடையாம்.

கண்ணகியிடத்து இல்லாளுக்குரிய நல்லழகு பலவும் நிறைந்து நிலவக் காண்கிறோம். சீதா பிராட்டியிடத்து

"இற்பிறப்பென்பதொன்றும்
இரும்பொறையென்பதொன்றும்
கற்பெனு பெயரதொன்றும்
களி நடம் புரிய"க் காணும்

யாம் கண்ணகியிடத்து இவற்றுடன் மனத்திண்மையையும் மாறுபட்டோரை ஒறுக்கும் திறமையையும் காண்கின்றோம்.

### மாபெரும் பத்தினி

மணிமேகலையெனும் கணிகையின் துறவு பாடிய சாத்தனாரும் "மாபெரும் பத்[illegible]" என நனி புகழ்ந்தேத்துகின்றார்.

கோவலன் மாதவி பால் மயங்கி கண்ணகியை மறந்துறைந்த காலத்து கண்ணகி கொழுநரொடு வாழும் மகளிர்க்குரியனவாகிய மேகலையணிதல், காதில் குழையணி மேதகப் பூணல், கண்களில் அஞ்சனம் கவினத் தீட்டுதல், நெற்றியிற் பொட்டிலையிட்டு மகிழ்தல், கூந்தலில் நெய்யணிக் குழம்பு பூசல் ஆயவற்யை மறந்தாள்; அல்லும் பகலும் அயலாரறியாது கண்ணீருகுத்தினாள்.

"நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச் சிலம்புள கொண்மென" எஞ்சியிருந்த இரு சிலம்புகளையும் அவனிடம் கொடுத்தாள். சிலம்பினைப் பெற்றவன் அவற்றின் முதலாகக் கொண்டு மதுரையெய்தி வாணிகஞ் செய்து இழந்த பொருளை ஈட்டத் துணிந்து கண்ணகியையுமுடன் செல்லுமாறு பணிப்ப அவளும் மகிழ்வுடன் உடன் சென்றாள். "கடுங்கதிர் வெம்மையிற் காதலன்றனக்கு நடுங்குதுயரெய்தி நாப்புளர வாடித் தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி" கண்ணகி தன் கொழுநனுடனும் கவுந்தியடிகளுடனும் ஐயக் கோட்டத்தின் ஒரு புடை இளைப்பாறியிருந்தபோது சாலினி தெய்வமுற்றுக் கண்ணகியை நோக்கி,

"பேதுறமொழிந்தனள் மூதறிவாட்டி" என்று புது முறுவலுடன் கணவன் பக்கலொதுங்கி நின்றாள்.

இத்துணை அடக்கமும் பொறுமையும் நிறைந்த கண்ணகி கணவன் கொலையுண்ட செய்தி கேட்டாள். பொங்கி எழுந்தாள். வன்மையின் வடிவம் கொண்டாள். கற்பெனுந் திண்மை அவ்வடிவத்துக் களி நடம் புரிந்தது.

காய் கதிர்ச் செல்வனை நோக்கித் தன் கணவன் கள்வனோ என வினவினாள். கள்வனல்லன் என்ற விடை கிடைத்தது. 'மெய்யிற்' பொடியார் பிரித்த கருங்குழலும் கையில் தனிச் சிலம்பும் கண்ணீருமாய் வையைக் கோன் கோயில் வந்தாள். தன் கணவனை அவன் ஆராயாது கொன்ற கொடுங்கோன்மையை அஞ்சாதிடித்துரையால் எடுத்துரைத்தாள். தன் காற் சிலம்பு கொண்டு தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலைநிறுத்தினாள். இறைமுறை பிழைத்த மன்னன் மயங்கி வீழ்ந்தான். வீழ்ந்தவன் எழுந்தானல்லன்.

### மாதர் குல மாணிக்கம்

ஆறொணாத் துயரத்து மனவிலாச் சினத்திலும் அறவழி பிறழ்ந்தாளல்லள் கண்ணகி. மதுரையை எரியூட்டியபொழுது "பார்ப்பாரறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவியெனுமிவரை" விடுத்துத் தீத்திறந்தார் பக்கமே சேரும்படி அங்கியங் கடவுளைப் பணித்தாள். இம்மாதர் குல மாணிக்கமே காவியக் கண்ணகி.

---

கடிதம்–8.

## அன்புள்ள மாலதிக்கு,

உனது கடிதம் கிடைத்தது. உலக மேடையொன்றை அமைத்து, அதில், உலகத்தில் உன்னத வாழ்க்கையை மேற்கொண்டிருந்த உத்தம இரத்தினங்கள் பலரை ஏற்றி, உனது லட்சியக் கனவுகளை அள்ளிச் சொரிந்திருக்கிறாய். இவர்களைப் பற்றியெல்லாம் நீ தெரிந்து கொண்டிருக்கிறாய் என்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். உலகமேதைகள், பெரியார்கள் வரலாறுகளைப் பெண்கள் தாம் பெரிதும் தெரிந்திருக்கவேண்டியவர்கள் என்பதை நீ இப்பொழுது உணர்ந்திருக்கிறாய் அல்லவா?

உயர்ந்த லட்சியங்களையும், தூய எண்ணங்களையும், குழந்தைகள் உள்ளத்தில் பதியவைக்கச் சிறந்த வழியென்ன என்பதை நாம் தெரிந்திருத்தல் அவசியம்.

உலகத்திலுள்ள பலரும்பெரியார்கள் வரலாறுகளைப் படிக்கிறார்கள்; போதிக்கிறார்கள். சிலர் இப்படிப்பட்ட சான்றோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கும்போது மட்டும் நல்ல மனம் உடையவர்களாக இருக்கிறார்கள். சிலர் காவியங்களைப் படிக்கும்போது மட்டும் இளகிய நெஞ்சம் உடையவர்களாய், உணர்ந்து உருகிக் கண்ணீரும் விடுகிறார்கள். சிலர் பிறர்க்கு அறத்தின் பெருமையை எடுத்துரைக்கும்போது மட்டும் நல்லவர்களாக இருக்கிறார்கள். சிலர் கடவுளும் தாமுமாக பூசையறையிலும் கோவில்களிலும் இருக்கும்போது மட்டும் நல்லவர்களாய் விளங்குகிறார்கள். சிலர் சுடுகாட்டில் மட்டும் நல்லமனம்பெற்று உண்மைகளை உணர்ந்து உருகவில்லையா!

உலகப் படைப்பை மட்டும் அறிதலும், உலகப் பெரியார் வரலாறுகளை மட்டும் படித்தலும், காவியங்களைமட்டும் கற்றலும், கடவுளைமட்டும் பூசித்தலும் இருந்துவிட்டால் மாத்திரம் வாழ்வில் லட்சியம் நிறைவேறிவிடாது. அவற்றை வாழ்க்கை லட்சியங்களாகக் கொண்டு நெறிபிறழாமல் வாழ்ந்துகாட்டுதல் தான் இவற்றைப் படிப்பதால் ஏற்படும் பயன் என்பதை மறந்துவிடாதே. மனிதகுல மாணிக்கங்கள் என்று உலகத்தோரால் போற்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## காய்கறிகளை அழுகாமல் காப்பாற்றுவது எப்படி?

— 'ஸ்ரீ தேவி' —

நமது வீட்டில், காய்கறிகளை அழுகாமல் காப்பாற்றிவைப்பதற்கு குளிர்சாதனப்பெட்டி இல்லை. இந்த வகையில் காய்கறிகளை நாம் எவ்விதம் அழுகாமல் காப்பாற்றி வைக்கமுடியும் என்பதை அறிந்திருப்பது அவசியமாகின்றதல்லவா? நமது நாட்டில் காய்கறிகள் தினமும் கிடைப்பதில்லை இன்று ஒருறுத்தல் கோவாவை நாற்பது சதத்துக்கு வாங்கினோமானால் ஓரிரண்டு நாளில் கோவா ஒரு றுத்தலின் விலை எழுபது சதமாகிவிடுவதுடன், சில சமயத்தில் கிடைப்பதும் அரிதல்லவா!

ஒவ்வொரு காய்கறிகளும் ஒவ்வொரு காலத்தில்தான் கிடைக்கும். அந்தக்காலத்தில் அவை, விலையில் மலிவாவதுடன், உபயோகப்படாமலும், அழிந்தும் போவதுண்டு. அந்தந்தக் காய்கறிகள், அவ்வவற்றின் உரிய பருவத்தைக் கடந்தபின், அவற்றை சமைக்க விரும்பினால் அவை கிடைக்க மாட்டா. மாம்பழங்கள் முதலியவை, அவை கிடைக்காத நாட்டுக்கு, அழுகாமல் காப்பாற்றும் முறையை அனுசரித்துச் சமீப காலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் தோட்டப்பயிர் செய்பவர்களுக்கு நல்ல ஊதியமும் கிடைக்கிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

---

## பழச்சாறும் ஜாமும் தயாரித்தல்

நமது நாட்டில் விசேஷமாகக் கிடைக்கும் மாம்பழம், அன்னாசிப்பழம், தோடம்பழம், எலுமிச்சம்பழம், நாகப்பழம், தக்காளிப்பழம் முதலியவைகளில் ரசம் அதிகமாகயிருக்கிறது. இந்தப்பழங்கள் விசேஷமாகக் கிடைக்கும் பருவக்காலங்களில் அவைகளைச் சேகரித்து அவற்றினின்றும் ரசத்தைப் பிழிந்தெடுத்துக் காய்ச்சி, சர்க்கரை சேர்த்தும் சேர்க்காமலும், இந்தப் பழச்சாறுகளைத் தயார் பண்ணலாம். அதிக நாள் இந்தச் சாறுகள் கெடாமலிருக்க, சோடியம் பென்சொயிட் என்னும் மருந்தையும் ஆபிரத்

(7-ம் பக்கம் பார்க்க)


மாமைட் பலமும் சுகமும் தருகிறதால் நானும் என் கணவரும், என்பிள்ளைகளும் மாமைட் அருந்துகிறோம் — இதைக் கவனிப்பது என் கடமையாகும்.



இவர்கள் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறார்கள். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். பலத்திற்கும் வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப் படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும்போழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.




மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்

AT-796

மாமைட்

## காய்கறிகளை..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

"என்ன... ஓரேயடியாகக் கூறிக்கொண்டு போகிறீர்களே... காய்கறிகளை எப்படி அழுகாமல் காப்பாற்றுவது என்பதைக்கூறவில்லையே..." என்று நீங்கள் குசுகுசுப்பதும் என் காதுகளுக்கு கேட்கிறது. உங்கள் பொறுமையை நான் சோதிக்க விரும்பவில்லை. கூறி விடுகின்றேன்.

நமது தேவைக்கு தேர்ந்தெடுத்த காய்கறிகளை எடுத்து வேண்டுமளவுக்குத் துண்டுகள் செய்து, அவைகளைப் 'பனைவில்' போட்டு வதக்க வேண்டும். அவை மெதுவானபக்குவத்தை அடைந்ததும், அவற்றை இறக்கி எடுத்து, பதார்த்தத்தின் நிறைக்குகால்பாக அளவு சோடியம் அசிடேட் (Sodium acerare) என்னும் வஸ்துவைப் பதார்த்தத்தின் ஒவ்வொரு பாகத்திலும் படும்படி தூவி, ஜாடி ஒன்றுக்குள் அடைத்து, காற்றுப்பரவாவண்ணம் இறுக மூடிவைத்துக் கொள்ளவேண்டும். இந்த முறையில் வைத்திருக்கும் காய்கறிகள் பலநாட்களுக்குக் கெடாமலிருக்கும். அவை வேண்டும்போது எடுத்து கறி, குழம்பு, கூட்டுகளாகச் சமைத்து சாப்பிட்டால் இனிமையாயும் உருசியாயும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

---

## பழச்சாறும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு ஒரு பாக அளவில் சேர்த்துக்கொள்ளலாம்.

பழச்சாறு தயாரித்த பின்னர் தான், முன் கூறிய ஜாமாகவோ, ஜெலியாகவோ இதைச் செய்யலாம்.

இனிப்பு அதிகமாக இருக்கக் கூடிய பழரசங்களுக்குத்தான் கொஞ்சம் சர்க்கரை சேர்க்க வேண்டும். உதாரணமாக, தோடம்பழ ரசத்துக்கு சிறிது சர்க்கரையும், எலுமிச்சம்பழ ரசத்துக்கு சர்க்கரை சேர்க்காமலும் தயார் செய்யலாம். பப்பாளிப்பழரசத்துக்குச் சர்க்கரை சேர்த்தும் சேர்க்காமலும் தயார் செய்யலாம். பப்பாளி ரசத்துக்குக் குடல் சம்பந்தமான வியாதிகளைப் போக்கும் சக்தி இருப்பதனல், சர்க்கரை சேர்க்காமல் தயாரிப்பதே உசிதமாகும்.

ரசங்களைப் பழங்களிலிருந்து பிழிந்தெடுத்தபின், அதில் கொட்டை கோது இல்லாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். பழரசங்களைக் காய்ச்சும்போது, அவை கொதித்துவரும் அளவுக்குச் சூடுகாட்டவேண்டும்.

வில்வப்பழம், விளாம்பழம் முதலியவைகளில் மக்களுக்கு வேண்டிய ஜீவசத்துப்பொருள்கள் அதிகமாயிருப்பதால் அவைகளிலிருந்தும் ஜாம் தயாரிக்கலாம்.

---

## அன்புள்ள மாலதிக்கு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நப்படுவோர் எல்லோரும் சிறந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்து அந்தவகையில் வழிகாட்டிகளாக இறவாப்புகழ் எய்தியவர்களே ஆகையால் போதனையிலும் பார்க்க சாதனையைநாம்மேற்கொள்ளவேண்டும். நாம் சிறப்பான வாழ்க்கைப்பாதையில் சென்று மற்றவர்க்கு வழிகாட்டவேண்டும். அதன்வழி நல்ல சமுதாயமே உருவாகும்.

குழந்தைகள் உள்ளங்களில் நல்ல வாழ்க்கை முறைகளையும் தத்துவங்களையும், லட்சியங்களையும் பதியவைக்க இந்தவாழ்ந்துகாட்டி வாழவைக்கும்முறை தான்சிறந்தது இந்த முறையை பாரம்பரியமாக ஏற்படச்செய்தால் இளம் உள்ளங்கள் நல்லவற்றைக் கிரகித்து நல்லவர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ளுவார்கள் அல்லவா? ஆகவே பெண்ணினம்மேதைகளினதும், பெரியார்களதும் வாழ்க்கைவரலாறுகளைத் தெரிந்திருந்தால் மட்டும்போதாது; மனப்பாடம் செய்து ஒப்புவித்தால்மட்டும் லட்சியம் கைகூடிவிடாது. வாழ்ந்தும் காட்டவேண்டும். அப்பொழுதுதான் கரடுமுரடான வாழ்க்கைப் பாதையிலும் வையத்து வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை முறையை குழந்தைகள் கடைப்பிடித்து ஒழுகுவார்கள். இப்படியான சிறந்த வாழ்வைத் தமது லட்சியமாகக் கொண்டவர்கள்தாமே, வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பெறும் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்கள் என்பதை மறந்து விடாதே. பெரியார்கள் வரலாறுகளை நன்கு படித்துத் தெரிந்து கொள். அவைகள் உன் வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டிகளாகவும், மேலும் பல பெரியார்களை உற்பத்தி செய்யவும் வழியமைக்கும் என்பது எனது நம்பிக்கை.

உனது அன்புள்ள,
கிருஷ்ணவேணி.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

புதன், 22-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8 00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் புதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 பாங்கு, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 எஸ். சர்வீஸ்வரசர்மாவயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 டாக்டர் எச். டபிள்யு. தம்பையா—பேச்சு, 9-30 டி. எஸ். மணிபகவதர்—பாட்டு.

### திருச்சி

(செய்திகள் காலை7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எம். காதர்கான்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-5 மெல்லிசை, 2-10 உயர்தர பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 6- இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கேள்வி அரங்கம், 7-45 கோவும் குமரரு கவிதை நாடகம், 8-00 இசை கோவை – வீணை, 8-30 திரைபட இசை, 9-15 நல்லுரை 9-20 லயவின்யாசம், 9-5 டெல்லி அஞ்சல், 9-50 இசை மாலை.

---

## கி. ச. வட்டார உப தேர்தல்

மட்டக்களப்பு, செவ்வா

மட்டக்களப்பு தென்பகுதியைச் சேர்ந்த கல்லடி உப்போடை கிராமசபை நாலாம் வட்டார அங்கத்தவர் திரு கே. நல்லரத்தினம் ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கான உபதேர்தலுக்குரிய அபேட்சா பத்திரங்கள் இம்மாதம் 23-ம் திகதி ம வட்ட உபதேர்தல் அதிகாரி திரு. எஸ். முகேசுவால் ஏற்றுக்கொள்ளபடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## சாரணர் பொன் விழா

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு குதிரைப்பந்தய மைதானத்தில் வருகிற ஞாயிற்றுக்கிழமை முதல் ஒருவார நடைபெறவிருக்கும் சாரண பொன்விழாவில் 3500 சாரணர்கள் பங்குபற்றுவர். வெளிநாட்டுச் சாரணர்களும் கூட இதில் கலந்துகொள்வார்கள்.

## பெற்றோருடன் செல்ல மகள் மறுப்பு

### வழக்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தப்பட்டது

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள வலையிறவுக் கிராமத்தைச் சேர்ந்த திரு. வைரமுத்து செல்லையா திருமதி செல்லையா பொன்னு ஆகியோரின் மகள் தனலட்சுமியைத் தமது பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றுள்ளதாக திரு. சாமித்தம்பி நவரத்தினம், திருமதி முருகப்பிள்ளை அருளப்பு ஆகியோர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையின்போது, தனலட்சுமியைத் தாய் தந்தையருடன் செல்லும்படி மாஜிஸ்டிரேட் கூறியும் அவர் மறுத்துவிடவே வழக்கை சுப்ரீம்கோர்ட்டிற்குப் பாரப்படுத்தி தனலட்சுமியை இரட்சணியசேனையில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

---

காட்மாண்ட், பெப். 20

நேபாளத்தில் 7 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## ஆசிரியையை கடத்தியதாக வழக்கு

### எதிரிக்கு ரு 300 பிணை

பருத்தித்துறை, ஞாயிறு

சரவெட்டியைச் சேர்ந்தவரும், குடத்தனையில் ஆசிரியையாகக் கடமைபார்ப்பவருமான ஆசிரியை மேரிதிரேசா என்பவரை கடந்த ஆண்டு மாசி மாதம் தனது காரில் ஏற்றிப் பள்ளியில் விடுவதாக கூறி அங்கு இறக்கிவிடாது அவரைப் பலவந்தம் செய்யும் நோக்கத்துடன் கொண்டு சென்றதாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் உதவி இன்ஸ்பெக்டர் திரு. கே. கந்தையா கார்ச்சாரதியான சண்முகம் மயில்வாகனம் என்பவரைக் கைது செய்து நீதிபதிமுன் ஆஜர் செய்தார்.

நீதிபதி முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் மேரிதிரேசா காரில் ஏற்றிச் சென்ற எதிரியை அடையாளம் காட்டினர்.

நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் எதிரியை ரூபா 300 பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை ஒத்திவைத்தார்

## வெளிமாணவர் பட்டப்பரீட்சை

பேராதனை, திங்கள்

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பரீட்சைக்குத் தோற்றும் வெளிமாணவர்கள்சம்பந்தப்பட்ட விஷயங்கள் பல்கலைக்கழக சபையின் அடுத்த கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் வெளிமாணவர்களுக்கு தனியான பரீட்சை வைப்பது இலங்கைப்பல்கலைக்கழக சட்டத்துக்கு முரணானது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கருதுகின்றனர்.

வெளிமாணவர்கள் உள்வதியும் மாணவர்களின் சிலவசதிகளைப்பெறுகின்றனர்.


---

## அமெரிக்க வானவெளி பயணம்

கேப்கனவரால், பெப். 19

பூமியை மும்முறை வலம்வருவதற்காக அமெரிக்கா அனுப்புவதற்கு தயார் செய்து வந்த மேஜர் கிளன் தமது வானவெளிப் பிரயாணத்தை நாளை மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் நாளையும் வானிலை சரியாக இருக்கமாட்டாதெனக் கருதப்படுகிறது.


உங்கள் தேகத்தின் ஒவ்வொரு அசைவும் ப்ரோட்டீன் புசிக்கின்றது.


உங்கள் தேகம் அசையும் ஒவ்வொருபோதும், நீங்கள் தேக உஷ்ணத்தையும் சக்தியையும் இழக்கின்றீர்கள். உங்கள் தேகம் ப்ரோட்டீனை எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. ஆனல் உங்கள் தேகத்திற்கோ, ப்ரோட்டீன் சேமித்து வைக்கக்கூடிய சக்தி கிடையாது. எனவே, நீங்கள் தினமும் போதுமான ப்ரோட்டீன் உட்கொள்ள வேண்டும். இல்லையேல் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத் தானே எரித்துக்கொள்கிறதோ, அப்படியே நீங்களும் சிக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.






ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.






ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.

ப்ரான்ட்ஸ்
எஸன்ஸ் ஒப் சிக்கன்

AT-712-3

## நித்திரையில் மரணம்

சாவகச்சேரி, செவ்வாய்

மத்துவில் வாசி முருகர் சின்னத்தம்பி (வயது 56) என்பவர் மத்தியான உணவு அருந்திவிட்டு நித்திரை செய்தார். பள்ளிக்கூடத்திலிருந்து வந்த அவரது பேரப்பிள்ளை தனது அப்பாவை ஆவலுடன் தேடிச்சென்று எழுப்பிய போது அவர் மரணப் படுக்கையில் இருந்ததைக் கண்டு கதறியது.

சாவகச்சேரிப் பொலிசாரும் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவிய நாயகமும் மரணவிசாரணை நடத்தினர்.

மரணவிசாரணையில் காலஞ்சென்றவரின் மனைவி சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:-

"சென்ற வெள்ளிக்கிழமை காலை எனது கணவர் கொடிகாமம் சந்தைக்குச் சென்று உணவுப்பொருட்கள் வாங்கி வந்து தந்துவிட்டு வயலுக்குப் போய் ஒருசுகம அருவி வெட்டிவந்து தலைவாசலில் போட்டார் பின்னர் நாங்கள் இருவருமாக மத்தியான உணவருந்திேனம். கோழிகள் நெல்லைத் தின்றுவிடுமென்று என்னை நெல்லுக்கதிர் கட்டுடன் படுக்கும்படி கூறித் தனக்கு நெஞ்சுக்கள் ஏதோ செய்வதாகவும் கூறி வீட்டுக்குள் நித்திரை செய்தார். எனது பேரப்பிள்ளையான வேலாயுதபிள்ளை பள்ளிக்கூடத்தால் வந்து 'எங்கே அப்பாவைக் காணவில்லை,' யென்று கேட்டார். அவர் வீட்டுக்குள் நித்திரை செய்கிறார் என்று கூறியதும் பிள்ளை உட்புகுந்து அப்பா! அப்பா!! என்று எழுப்பினர் ஒரு பேச்சு மூச்சுமில்லை. 'ஐயோ அப்பா செத்துப் போனர்' என்று கூறினர். நானும் போய்ப் பார்த்தபோது அவர் இறந்துகிடக்கக்கண்டேன்."

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா ஜெமினி கணேசன், பத்மினி நடித்த மீண்ட சொர்க்கம்

## ஆனைப்பந்தி கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், செவ்

ஆனைப்பந்தியிலுள்ள திரு. ஏ. பொன்னம்பலத்துக்குச் சொந்தமான தனிப்பட்ட கடையொன்றில் பட்டப்பகலில் மேசையை உடைத்து யாரோ பணத்தைத் திருடிவிட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. 220 ரூபாய் திருடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## இலங்கை—ஈரான் வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு. செவ்.

இலங்கைக்கும் ஈரானுக்குமிடையிலுள்ள வர்த்தக உறவுகளை விஸ்தரிக்கும் புதிய வர்த்தக உடன்படிக்கையொன்று இம்மாதம் 18-ம் திகதி தெஹ்ரானில் கையொப்பமிடப்பட்டது. இலங்கையின் சார்பில் இலங்கை ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு கைச்சாத்திட்டார். இந்த ஒப்பந்தத்தின்படி 10 லட்சம் பவுண் பெறுமதியான தேயிலையை ஈரான் இலங்கையிடமிருந்து வாங்கும். ஈரானிடமிருந்து சீரகம் மற்றும் தானிய வகைகளை ஐந்து லட்சம் பவுணுக்கு இலங்கை வாங்கும். இலங்கை ஈரானிடமிருந்து வாங்கும் பொருள்களில் கருவாடும் அடங்கும்.

----

## கி. ச. அங்கத்தவர் பதவி

### ஆசிரியர் ராஜினமா

மாவிட்டபுரம், செவ்வாய்

தெல்லிப்பழை கிராமசபையின் 15-ம் வட்டார அங்கத்தவரும், அக்கிராம சபையின் சமூகசேவைப் பகுதித் தலைவரும், மாகாஜனக் கல்லூரி ஆசிரியருமான திரு. ரி. பி. முருகையா கிராமசபை அங்கத்தவர் பதவியினின்றும் ராஜினமச் செய்துள்ளார்.

இவரது கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதால் தொடர்ந்து அங்கத்துவம் வகிக்கமுடியாமையால் இவர் ராஜினமா செய்துள்ளாரெனத் தெரிகிறது.

----

## 2 வருட சிறையும் ரூ. 50 அபராதமும்

மாவிட்டபுரம், செவ்வாய்

பிராம்பத்தையைச் சேர்ந்த தம்பு தங்கராசா என்பவர் அவ்வூர் வாசியான கனகசபை சிவலிங்கம் என்பவருக்குச் சொந்தமான 40 ரூபாய் பெறுமதியான 'பெட்ரோல் மாக்ஸ் லாம்பைத் திருடியதாகச் சங்கானைப் பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 2 வருடச் சிறைத் தண்டனையும் 50 ரூபாய் அபராதமும் விதித்தார்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறியதாயினும் கீர்த்தி பெரிதாக வளர்ந்து வருவதையும் உணர மிக நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

ஃ ஃ ஃ

அன்று யாழ்ப்பாண மேயர் தேர்தலைப்பற்றி 'ஈழநாடு' எழுதிய தலையங்கத்தைப் பார்த்துவிட்டு ஓர் அன்பர், பாராட்டி கட்சி விருப்பு வெறுப்பு இன்றி, நடுநிலைமையில் நின்று பொது மக்களின் நன்மைக்கு 'ஈழநாடு' மேன்மேலும் தொண்டு செய்யவேண்டுமென்று டெலிபோனில் வாழ்த்தினர்.

இந்த அன்பர்களுக்கெல்லாம் 'ஈழநாடு' நன்றி தெரிவிப்பதுடன், பொது நலத் தொண்டுக்கு அது தன்னை மூன்னிலும் அதிக உற்சாகத்துடனே அர்ப்பணித்துக்கொள்ளுகின்றது. "என் கடன் பணி செய்து கிடப்பதே". "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே."

## "தகவல் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும்"

### டாக்டர் ராதா கிருஷ்ணன் கருத்து

புதுடில்லி, பெப். 20

"என்னவித ஆபத்து வந்தாலும் சிந்தனைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், தகவல் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியது மக்களின் கடமை என்று இந்திய உபராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் இன்று புதுடில்லியில் ஆரம்பமான தகவல் தொடர்பு மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"தகவல் வசதிகள் பூரணமாகவுள்ள இக்காலத்தில் மனிதகுலம் ஒன்று சேராவிட்டால் மனிதகுலம் அழிந்து போக வேண்டியதுதான் மனிதகுல வளர்ச்சிக்கு இன்று போல வாய்ப்பு என்றுமே இருந்ததில்லை" என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

இந்தியாவில் இன்று நடைபெறும் பொதுத் தேர்தல்பற்றி டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகையில் இந்தியாவில் ஜனநாயகம் நன்கு வளர்ச்சியடையுமென்பதில் தமக்குப் பூரண நம்பிக்கையிருக்கிறதென்றார்.

இரண்டு வாரகாலம் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டிற்கு இந்திய சட்டமந்திரி அசோக் சென் தலைமை வகித்தார்.

## கருவாட்டு 'லைசன்ஸ்' ரத்தாகும்

கொழும்பு, செவ்

கருவாடு விற்பதற்கு 'லைசன்ஸ்' வழங்கப்பட்ட பெரும்பாலான தனிப்பட்ட வர்த்தகர்களின் 'லைசன்ஸ்களை' ரத்துச் செய்வதென்று கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

## எதிர்க்கட்சிகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் சபை கூடும்பொழுது கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா கமிட்டி நிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

யு. என். பி, தமிழரசுக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகிய முக்கிய எதிர்க் கட்சிகள் மசோதாவுக்கு முக்கிய பல திருத்தங்களைக் கொண்டு வரவிருக்கின்றன.

சுப்ரீம் கோர்ட்டின் சுதந்திரத்தையும் அதற்கு இப்பொழுதுள்ள அதிகாரத்தையும் பாதுகாப்பதற்கும் நீதிபரிபாலனத்தின் அஸ்திவாரத்தைப் பாதுகாப்பதற்குமான திருத்தங்களை தமிழரசுக் கட்சி முக்கியமாகக் கொண்டுவர விருப்பதாகத் தெரியவருகிறது.

தமிழரசுக் கட்சியின் பார்லிமெண்ட் அங்கத்தவர்களும் ஆலோசகர்களும் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக் கிழமையும் கூடி மசோதாவுக்குத் தாங்கள் கொண்டு வரவிருக்கும் திருத்தப் பிரேரணைகளைத் தயாரிக்கவிருக்கிறார்கள். திருத்தப் பிரேரணைகள் நாளை வியாழக்கிழமை காலை தயாராகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

லங்கா சமசமாஜக் கட்சி எம். பி.க்கள் நாளை வியாழக் கிழமை கூடி தங்கள் திருத்தப்பிரேரணைகள்பற்றி ஆராய்ந்து தயாரிக்கவிருக்கின்றனர். கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா சதித்திட்டம் சம்பந்தமாக மட்டும் உபயோகிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவதாகவே சமசமாஜக் கட்சியின் திருத்தங்கள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

யு. என். பியும் நாளை கூடுகின்றது. "இன்னும் மசோதாவுக்கான திருத்தப் பிரேரணைகளை நாங்கள் தயாரித்து முடிக்கவில்லை" என்று கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். மசோதாருக்குத் தாங்கள் பல திருத்தங்களைக் கொண்டுவரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டமும் நாளைக் காலை நடைபெறவிருக்கிறது.

## மக்கள் திரண்டனர்!

வாஷிங்டன், பெப். 20

இன்று கேப்கனவரா விலிருந்து அமெரிக்க வானவெளிப் பிரயாணி மேஜர் கிளன் பூமியை மூன்று தடவை வலம் வருவதற்காக வானவெளிக்கு அனுப்பப்பட்ட செய்தி வெளியானதும் நியுயோர்க் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் சந்திகளிலும் ரயில்வே நிலயங்களிலும் காரியாலயங்களிலும் 'டெலிவிஷன்' பெட்டிகளுக்கு முன்பும் ரேடியோ பெட்டிகளின் முன்பும் திரண்டு நின்றனர்.

லண்டனிலிலும் பெருந்தொகையான மக்கள் அமெரிக்க வானவெளிப் பிரயாணியின் செய்தியைச் கேட்க ரேடியோ பெட்டிகளின் முன் திரண்டனர்.

## சங்கிலிதிருடிய வழக்கு

### தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் 28-ம் திகதி வடலியடைப்பு பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற திருவிழாவுக்கு தவில் கச்சேரி செய்ய வந்திருந்த இணுவிலைச் சேர்ந்த ராசு புண்ணியமூர்த்தி என்பவருக்குச் சொந்தமான ரூ. 200 பெறுமதியான கழுத்துச் சங்கிலியைத் திருடியதாக சங்கானை மேற்கைச் சேர்ந்த கனகசபை நடராசா என்பவர் மீது குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் சங்கானைப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியைச் குற்றவாளியாகக் கண்டு அவரின் விரல் அடையாளத்தை எடுக்க உத்தரவிட்டு அடுத்த மாதம் 12-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டதுடன் தமது தீர்ப்பை அத் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தனியூற்று கொலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை முடிவில் ஜூரிமார் ஒரு மணி நேரம் ஆலோசனை செய்த பின், எதிரி செல்லப்பா செல்லத்துரை கொலைக்குற்றவாளியென்று பெரும்பான்மையான ஜூரிமார் (ஏழில் ஆறுபேர்) தெரிவித்தனர்.

ஜூரிகளின் தீர்ப்புக்கிணங்க நீதியரசர் எதிரிக்கு மரணதண்டனை விதித்தார். இவ்வருடம் மார்ச் மாதம் 31-ந்தி திகதி போகம்பரை சிறைச்சாலையில் எதிரி தூக்கிலிடப்பட வேண்டுமென்று நீதியரசர் தெரிவித்தார்.

தண்டனை அளிப்பதற்கு நீதியரசர் எதிரியைப் பார்த்து "ஏதாவது சொல்ல விரும்புகிறீரா?" என்று கேட்டபொழுது தனக்கு மன்னிப்பளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

பிராசிக்கியூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். எதிரியின் சார்பில் திரு. எஸ். நாகராசா ஏற்படுத்தப்பட்டிருந்தார்.


வேது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!

இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும் உத்தமியின் காவியம்!

இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன் பத்மினி நடித்த

மீண்ட சொர்க்கம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962 ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.